1410

Registered No. M. 378.

5-MAR 1924

# பூர்ணசந்திரோதயம்.

**A Tamil Monthly Journal**

Devoted to Theosophy, Religion Science, Art and Civilization.

தொகுதி 8 | 1917-ஞு டிசம்பர்மீ பிங்கள ஞு மார்கழிமீ | பகுதி 8

அ. ரங்கசாமி ஐயர், B.A., B.L., F.T.S., பத்திராதிபர்.

தபால் சார்ஜ் உள்பட வருஷ சந்தா இந்தியாவுக்கு ரூ 2.

அன்னிய நாடுகளுக்கு ரூ 2—8—0 தனிப்பிரதி அணா 4.
தபால் சார்ஜ் வேறு

மதுரை.
விக்டோரியா அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

Copy-right Reserved.

2473

# விஷய அட்டவணை

# (CONTENTS.)


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தற்கால நிலைமை—ஆர். ரங்கஸ்வாமி ஐயர் பி. ஏ.<br>Current Events—R. Rangaswami Iyer, B. A. | 281 |
| 2. | பிரஹ்மக்ஞான தரிசனம் (பாலபாடம்)—வி. வெங்குசாமி ஐயர்<br>Elements of Theosophy—V. Venkusami Iyer | 289 |
| 3. | தேகபலத்தின் இன்றியமையாமை டி. எம். மொஹைதீன்<br>Necessity for Physical Training<br>T. M. Mohideen Kavirayar. | 292 |
| 4. | முதற் சாதனம்—கமலத்தன்னை.<br>First Step—Kamalathannai | 300 |
| 5. | சாந்தம் ஜகவீரபாண்டியன்.<br>Santi—Jagaveera Pandiyan. | 311 |
| 6. | சமாசாரம்—News and Notes. | 316 |
| 7. | புத்தக வரவு—Review of Books. | 320 |


**பிழை திருத்தம்.**

பக்கம் நெம்பர் 213 முதல் 220 என்பதை 313 முதல் 320 என்று திருத்திக்கொள்ளவும்.

---


விலை] 'மரணபயம் வேண்டாம்.' [அணா 2.

**ஒவ்வொருவரும் படிக்கவேண்டும். !!**

காலஞ்சென்ற பிரஹ்மஸ்ரீ ப. நாராயண ஐயர் பி. ஏ. பி. எல்., எப். டி. எஸ்., ஹைகோர்ட்டு வக்கீல், மதுரை பிரஹ்மக்ஞான சபை பிரசிடெண்டு அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டது. ஸ்ரீமான் லெட் பீடர் அவர்களுடைய அருமையான "To those who mourn" என்ற புத்தகத்தின் மொழி பெயர்ப்பு.

வெகு இலகுவாய் யாவரும் அறியும்படி தமிழில் எழுதப்பட்டிருக்கிறது. யாவரும் அவசியம் வாங்கிப் படிக்கவேண்டியது. இத் தொகுதியில் முன் சஞ்சிகையில் 158-ஆம் பக்கம் பார்க்க

விலை சொற்பம் அணா 2 மட்டும்.

தபால் சார்ஜ் வேறு. ஸ்டாம்பு முன் அனுப்பிப் பெறுக.

பிரஹ்மக்ஞான மந்திரம், மதுரை.

# மதுரை பிரஹ்மக்ஞான சபை பிரசுரங்கள்.

(1) **யோகசூத்திரம்:**—(ப. நாராயணய்யர்) பகவான் பதஞ்சலி முனிவர் இயற்றிய சூத்திரங்கள் தமிழ்மொழி பெயர்ப்புடனும் சிறந்த குறிப்புரையுடனும் வெளியிடப்பட்டது. ஸ்ரீமத் வியாஸரிஷி, வாசஸ்பதிமிசிதார், ஸ்ரீமத் விக்ஞானபிக்ஷு, ஸ்ரீமத்போஜராஜர், ஸ்ரீஸதாசிவ பிரஹ்மேந்திரர், ஸ்ரீமத் ராமநாந்தயதிகள், ஸ்ரீமத் சுவாமி நாராயணதீர்த்தர், இவர்கள் இயற்றியுள்ள யோக பாஷ்யம், தத்வவைசாரதி, யோக வார்த்திகம், இராஜமார்த்தண்டம், யோகசுதாகரம், மணிப்பிரபா, யோக சித்தாந்த சந்திரிகை ஆகிய கிரந்தங்களினின்றும் நூலாசிரியருடைய சொந்த அபிப்பிராயத்தினின்றும் திரட்டிக் குறிப்புரை எழுதப்பட்டுள்ளது. விலை ரூ 1. எல்லோரும் அவசியம் பார்க்கத்தக்கது.

(2) **யோக உபந்யாசங்கள்:**—(ப. நாராயண அய்யர்) முற்கூறிய கிரந்தத்தைப் படித்தின்புறுவதற்கு இது மிகவும் உபயோகமாயிருக்கும். யோகத்தின் நிலைகளைத் தாண்டி உயர் படிகளின் அநுபவங்கள் நிறைந்த ஸ்ரீபெஸண்ட் அம்மையார் 1917ஆு டிசம்பர்மீ 27, 28, 29, 30 தேதிகளில் காசி க்ஷேத்திரத்தில் பிறஹ்மக்ஞான ஸமாஜத்தின் 32–வது மஹாசபையில் ஆங்கிலத்தில் செய்த நான்கு உபந்யாசங்களின் தமிழ் வாசகமே இதுவாம். இதன் விலை அணா 12 தான்.

(3) **மனிதன் வம்சாவளியின் உண்மை:**—(ப. நாராயணய்யர்) இதுவும் அம்மையவர்களின் நான்குபந்யாசங்களின் தொகுதி. ஹிந்துமத கிரந்தங்களில் அடிக்கடி வரும் பிலக்ஷக்கிரௌஞ்ச முதலான த்வீபங்களைப்பற்றியும் பாற்கடல் தயிர்கடல் முதலிய பலசமுத்திரங்களைப்பற்றியும், யக்ஷ, ராக்ஷஸர் முதலிய ஜாதியாரைப் பற்றியும், பிதிர்கள், தேவர்கள், ரிஷிகள பற்பலஉலகங்கள், இவைகளின் தத்துவங்களைப் பற்றியும் உள்ள ரகசிய விஷயங்கள் கோவையாயும் தொடர்ச்சியாயும், தெளிவாகவும், விரிவாகவும் இப்புத்தகத்தில சொல்லப் பெறறிருக்கின்றன. இதைப்படியாத வரை, பாற்கடல், தயிர்கடலைப்பற்றி ஆங்கிலங்கற்கும் நம் குழந்தைகள் கேட்கும் வினாக்களுக்குத் திருப்தியான பதில் அளிக்கத் தெரியாது. இது முக்யமான கிரந்தம். இதன் விலை அணா 8.

(4) **பிராசீன தர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும்** (ப. நாராயணய்யர்) இதுவும் ஸ்ரீபெஸண்ட் அம்மையார் செய்த நான்கு உபந்யாசங்கள். 1-வது "நான்கு ஆசிரமங்கள", 2-வது "ஆலயம் பூஜை, பூஜகர்கள்" 3-வது ஜாதிமுறைமைகள்" 4-வது 'ஸ்திரீ தர்மங்கள்", எவனொருவன் நமது பிராசீன தர்மங்களைத் தெரிந்து கொள்ள வில்லையோ, அவனுக்கு நந்தேசத்து வருங்கால மஹிமைக்குத் தக்கபடியும் நடந்துகொள்ள இயலாது' இதைப்படிப்போர்கள் பிராசின தர்மங்களை இக்கால முறைக்கேற்ப எங்ஙனம் கைக்கொளவது ஸாத்தியம் என்பதை நன்கறிவார்கள். இதன் விலை அணா 6.

(5) **ஹிந்துமத தூஷணையின் பரிகாரம்:**—(ப. நாராயணய்யர்) (1) விக்கிரஹாராதனை, (2) தேவர்களின் பூஜை, (3) திரிமூர்த்திகள் (4) ஸ்ரீகிருஷ்ண பகவான், (5) சிராத்தம், (6) ஹிந்து மதம்—

யுக்திக்கும், சாஸ்திரத்திற்கும் ஒற்றுமையானது, (7) விசாரமுறை ஆகிய இவ்வேழு விஷயங்களையும் பற்றி அழகாய் விவரிக்கப்பெற்றுள்ளது. இத்தகைய புஸ்தகங்களைப் படித்தாலொழிய நம்மவர் கிறிஸ்தவ பாதிரிகளுக்கு விடைகொடுக்க இயலாதவர்களாயிருக்கிறார்கள். கிறிஸ்தவ பள்ளிக்கூடங்களில் படிக்கும் ஹிந்து வாலிபர்களும் ஏனைய பள்ளிக்கூடங்களின் மாணவர்களும், இதனை யவசியம் படிக்கவேண்டும். இதுவும் ஸ்ரீபெஸண்ட் அம்மையார் அவர்களால் எழுதப்பெற்றது. இப்புத்தகங்களைப் படிப்பதால் ஸ்வபாஷையாகிய தமிழை விருத்திசெய்து கொள்வதோடு, ஸ்ரீபெஸண்ட் அம்மையாருடைய நவீனமான உபந்யாஸ முறைகளும் விஷயங்களின் நேர்மையும இன்னவென்றும் அறிந்து கொள்ளலாம். இதன் விலை அணா 4.

(6) உதாஸீந ஸாது ஸ்தோத்ரம்:—(பி. ஆர். சுந்தரராஜய்யர்) இது ஓர் அருமையான ஸம்ஸ்கிருத நூல். தேவதீர்த்தர் என்ற ஓர் யதியால் இயற்றப்பெற்றது. இது பாம்பின்நடை யெனப்பொருள் தரும் புஜங்கப் பிரயாதமாகிய சந்தத்தில் இன்னிசையான பதங்களால் இசைந்தன. உலகின்கண்ணுள்ள எல்லாவற்றுள்ளும் ஈசுவர விளக்கம் அதிகமாயுள்ள மஹான்களைப்பற்றிய துதியாக இச்சுலோகங்கள் திகழ்கின்றன. இதில் மஹான்களுடைய லக்ஷணங்களைப்பற்றி விவரங்களநேகமுள்ளன. தமிழ்மொழிபெயர்ப்பு, குறிப்புரைகளோடு வெளியிடப்பட்டது. இதன் விலை 6 அணா.

(7) ஸர்வசமய ஐகமத்யஸார சங்கிரஹம்:—(ப. நாராயண ஐயர்) இக்காலத்தில் எவனொருவனும் ஒருமதத்தைப்பற்றி மட்டும் நன்கு தெரிந்துகொண்டு அனுஷ்டிப்பது போதாது, அதோடுகூட, இதரமதங்களும் அவரவர் மதத்தைப்போலவே அவ்வளவு பெருமையுடையது என்றும் தெரிந்து கொள்ளல் அவசியம். விசேஷமாக நமமிந்தியர் அனைவரும் இம்முறையாய் உண்மையறியவேண்டும். ஏனெனில் நந்தேசத்தில் நானா மதஸ்தர்களும் ஒற்றுமையாய் வாழவேண்டும் தருணமிது. ஓரே உண்மையைப் பல மதகிரந்தங்களுடைய மேற்கோள்களாலும் இதில் ஸ்தாபிக்கிறார். இதன் விலை அணா 4.

(8) தியானக்கிரமவிஷயம்:—(கே. யஸ் ராமச்சந்திரய்யர்) தியானத்தின் பிரயோஜன மென்னவெனில், பிரதி மனுஷ்யனும அவனவன் தினசரி நடபடிக்கைகளில், ஸத்யத்தையும், தர்மத்தையும் சுகத்தையுமே கடைப்பிடிக்கும் திறனைப்பெறுமாறு, சஞ்சலமுள்ள நம்மனதை ஓர் குறித்த வகையிற் பழக்குவதேயாம், அதற்கு இலகுவாக "ஸர்குரு சரணங்களில்" என்ற அரிய கிரந்தத்தின் விஷயங்கள் யாவும் மாதத்திற்கொரு சிந்தனையாகவும், வாரந்தோறும் அப்பியசிக்கத்தக்க ஓரோர் நற்சிந்தனையாகவும், பிரதிதினமும் நமது அநுஷ்டானத்தை நேர்மைப்படுத்தக்கூடிய ஓரோர் நற்சிந்தனையாகவும் வகுக்கப்பட்டு, தியானக்கிரமத்திற்கு அநுகூலமாய் பிரசுரமாகியிருக்கின்றன. எல்லோரும் வாங்கிப்படித்து தியானித்து நற்பயன் பெறுமாறு விலை சொற்பமாக 4-அணா வீதம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது.

பிரஹ்மக்ஞான சபை, மதுரை.

2473

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 2 | 1917-௵ டிசம்பர்௴ பிங்கள௵ மார்கழி௴ | பகுதி 7

## தற்கால நிலைமை.

மதுரையில் சென்ற நவம்பர்௴ 26, 27-ஆம் தேதிகளில் ஸ்ரீமான் வி. ஜினராஜதாஸரவர்களும் அவர் மனைவியாரான ஸ்ரீமதி டொரதி ஜினராஜதாஸ அம்மாளவர்களும் வந்திருந்தார்கள். 26-ஆம் தேதி சுமார் 3 மணிக்கு மதுரை பிரஹ்மஞான மந்திரத்தில் இந்திய ஸ்திரீகளின் சங்கத்தினரால் கூட்டப்பட்ட ஒரு ஸ்திரீகளின் சபையில் ஸ்ரீமதியவர்கள் உபந்யாசம் செய்தனர். ஆதிகாலத்தில் இந்தியஸ்திரீகள் ஞானத்திலும், அறிவிலும், சீலத்திலும் சிறந்தவர்களாயிருந்தார்கள் என்றும் அவர்களுடைய மேன்மையை சரித்திர வாயிலாக நாம் நன்கு அறிகிறோம் என்றும், சென்ற 100 அல்லது 150 வருஷங்களாகத்தான் ஸ்திரீகளின் நிலைமை மக்கினப்பட்டிருப்பதாயும், ஆனால் தற்காலத்தில் நிகழும் கிளர்ச்சியாவது ஸ்திரீகளையும் தங்களுடைய கடமையை அறியும்படி செய்திருக்கிறது என்றும், நமது அன்னையாராகிய மாது ஸ்ரீ அன்னிபெஸண்டம்மாளை உதகமண்டலத்திலும் கோயமுத்தூரிலும் நிர்ப்பந்தித்திருந்த சமயத்தில் ஸ்திரீகள் கூடி திருவல்லிக்கேணியில் கங்கைகொண்டான் மண்டபத்திலிருந்து ஒரு பெரிய பவனியாய்ப் புறப்

பட்டு அவ்வூர் பார்த்தசாரதி ஸ்வாமி கோவிலை வலம்வந்து அங்குச் சென்று அர்ச்சனை நடத்திய விஷயமே, ஸ்திரீகள் இந்திய ராஜீய சீர்திருத்த முறைகளில் தங்களுடைய பொறுப்பை அறிந்திருக்கிறார்களென்றும், ஒப்பந்தக்கூலி ஏற்பாட்டை மாற்றுவதற்கு முக்கிய காரணமாக விருந்தது இந்தியஸ்திரீகள் இந்திய ராஜப் பிரதிநிதியவர்களையும் அவர் மனைவியாரையும் பார்த்து அம்முறையைக் கண்டித்துப் பேசினதென்றும், இந்திய ஸதிரீகள் குழந்தைகளை வளர்ப்பதற்கும், அவர்களைச் சரியானபடி நல்வழியில் செலுத்தவும் வேண்டுமானால் தங்கள் படிப்பை அதிகரிக்க வேண்டியது மிக்க அவசியமென்றும், மேலும் நகர ஆளுகை விஷயமாயும், ராஜீய விஷயமாயும்கூட ஸ்திரீகளுக்கு உத்தரவாதம் உண்டு என்றும், எல்லா விஷயங்களிலும் ஸ்திரீகள் தங்களுடைய கடமையைச் செய்தாலொழிய இந்தியாவானது முன்னேற்றமடைய முடியாதென்றும், எப்படி ஒரு பக்ஷியானது இரண்டு இரக்கைகளும் இல்லாமற்போனால் பறக்க முடியாதோ அம்மாதிரியே ஸ்திரீகள் மூடர்களாயும், முன்னுக்கு வரப் பிரியமற்றுமிருந்தால் இந்தியாவானது முன்னேற்ற மடைவது முடியாதகாரியம் என்றும், ஆனால் அப்படி ஸ்திரீகள் இதுவரை அசிரத்தையாயிருப்பதற்குக் காரணம் புருஷர்கள் தான் என்றும், தாம் எங்கு எங்கு சென்று ஸ்திரீகளுடன் பேசநேரிட்டதோ அங்கு அங்கெல்லாம் ஸ்திரீகள் புத்திசாலித்தனமாய் இந்தியாவை முன்னேற்ற மடையச் செய்வதில் ஆவலுள்ளவர்களா யிருக்கிறதைப் பார்த்துச் சந்தோஷப்படுவதாயும் கூறினார். அங்குக் கூடியிருந்த ஸ்திரீகளுக்கு இவர் மொழிகளை பிரஹ்ம ஸ்ரீ வி. ராமசந்திரையரவர்கள் தமிழ்ப்படுத்தியுரைத்தார். ஸ்திரீகள் அனைவரும் அகமகிழ்வுடன் கேட்டார்கள். இங்ஙனம் இந்திய ஸ்திரீகளின் கூட்டமானது மிகவும் மங்களகரமாய் முடிந்தது.

* * *

அன்று மாலையில் ஸ்ரீமீனாக்ஷி வித்யாசாலைப் பெண்களுக்குப் பரிசிலளிக்கப்பெற்றது. அவ்வமையம் ஸ்ரீமதியவர்கள் அக்கிராசனம் வகித்துப் பரிசில்களை அளித்தார்கள்

இவ்வித்யாசாலையானது ஸ்திரீகளின் கல்வி விஷயமாய்ப் பேருதவிபுரிந்து வருவது பிரசித்தமான விஷயம். வருஷா வருஷம் இப்பள்ளியில் படிக்கும் பெண்களின் தொகை அதிகரித்து வருகிறது. பரிசிலளிக்கும் கொண்டாட்டத்துக்கு நகரவாசிகள் ஆவலுடன் வந்து குழந்தைகளுடைய சம்பாஷணைகளையும், பாடல்களையும், கேட்டுச் சரமோஷம் செய்வது வழக்கமாயிருக்கிறது. இவ்வருஷம் நடந்த கொண்டாட்டத்திலும் வீணை, ஹார்மோனியம் முதலிய வாத்யங்களில் இவ்வித்தியாசாலை மாணவிகள் அடைந்திருந்த தேர்ச்சியைப் பார்த்து யாவரும் மிகவும் கொண்டாடினார்கள். அக்கிராசனம் வகித்த ஸ்ரீமதி டோரதி ஜினராஜதாஸ அம்மாளவர்கள் தான் இப்பள்ளியின் சிலாக்கியத்தையும் பேருபகாரத்தையும் மிகவும் மெச்சியதாகவும், இந்திய ஸ்திரீகளின் வித்யாபி விருத்தி விஷயமாய் இந்தியர்கள் அதிகமாய் முயலவேண்டும் என்றும் கூறினர். உயர்தரக் கல்வி கற்பிக்கும்படி மேல்வகுப்புகள் ஏற்படுத்தி அதற்கு வேண்டிய உபாத்தினிகளையும் நியமித்து பிரௌடையான ஸ்திரீகளும் உயர்தரக் கல்வியைக்கற்கும்படி செய்ய வேண்டுமென்பது இவ்வித்தியாசாலையின் நிர்வாகஸ்தர்களுடைய நோக்கமாயிருக்கிறது. இந்நோக்கம் எப்போது நிறைவேறுமோ தெரியவில்லை. ஆனால் தனவந்தர்கள் தங்களுடைய கடமையை அறிந்து பொருளுதவி செய்ய முன் வருவார்களாயின் இந்நோக்கமானது சடுதியில் நிறைவேறுமென்பதில் ஐயமில்லை.

*
* *

ஸ்ரீமதி டோரதி அம்மாளவர்கள் ஆங்கில தேசத்தில் பிறந்து மேல்நாட்டு நாகரீகத்தில் சிறந்தவராக யிருந்தாலும், இந்திய ஸ்திரீகள் ஆடைபோல் ஆடை தரித்திருந்தனர். அவ்வுடையானது டாம்பீகமாயில்லாமல் அழகான சாதாரணப் பட்டுச்சேலையாயிருந்தது. நம்முடைய ஸ்திரீகள் மாதிரி தரையில் சௌகரியமாய் உட்காருவதற்கு இவ்வுடையானது இடங்கொடுத்தது. இந்திய ஸ்திரீகளுடைய உடையானது அழகும் கம்பீரமும் வாய்ந்தது என்று ஆங்கிலரஸிகர்கள் புத்தகங்களில் படித்திருக்கிறோம். இருந்த

போதிலும் நம்முடைய ஸ்திரீகள் நாகரீகத்தில் மிருதுவாக
எண்ணங்கொண்டு ஆங்கில மாதர்கள் போலக் கைகள் முழு
வதும் மறைத்த கஞ்சுகங்களையும் கால்களில் உயர்ந்த குதி
யுள்ள பாதரக்ஷைகளையும் தரிப்பது வழக்கமாய்க்கொண்டு
வருகிறது. ஆனால் இவ்வம்மணியோ இந்திய ஸ்திரீகளின்
உடையைத்தரித்து இந்திய ஸ்திரீகளைப்போல் கால்களில்
மேஜோடு இல்லாமல் நடப்பதும் உட்காருவதும் இந்திய
ஸ்திரீகளின் மனதைக் கவர்ந்ததெனத் தோன்றுகிறது.
மேற்கூறிய பரிசளிக்கும் கொண்டாட்டத்தில் வந்திருந்த
ஆடவரும் இந்திய ஸ்திரீகளின் உடையை இவ்வம்மணி
தரித்திருந்த நேர்த்தியையும், சிற்சில பள்ளிப்பெண்கள்
ஆங்கிலமாதர் உடையைப்போல தரித்திருந்ததையும் ஒப்
பிட்டு முன்னதின் அழகை மெச்சினார்கள். ஆகையால்
இந்திய உடையின் அழகைப்பற்றி ஒருவார்த்தைகூடச்
சொல்லாமலிருந்தும், அநேகரை ஆங்கில உடையைப்போல
உடையைத்தரிக்க வேண்டுமென்ற மூடஎண்ணத்தை முத
றிலும் ஒழித்து விடும்படி இவ்வம்மணி செய்திருக்கிறார்
என்று நினைக்க இடமிருக்கிறது. இது பெரும் லாபம்.

* * *

ஸ்ரீமான் ஜினராஜதாஸர் அவர்கள் 26-ஆம் தேதி
மாலையில் "மதத்திற்கும் சாஸ்திரத்திற்கும் உள்ள சம்பந்
தத்தைப்"பற்றி யுபன்யசித்தார்கள். மறுநாள் காலையில்
"உழைப்பு" என்ற விஷயத்தைப்பற்றி முக்கியமாய் மாண
வர்களுக்கு ஓர் உபந்யாசம் செய்தார். அன்று மாலையில்
"பிரஹ்மக்ஞானமும் இந்தியப்புராதன நாகரீகமும்" என்ற
விஷயத்தைப்பற்றிப் பிரசங்கித்தார். ஒவ்வொரு உபந்
யாசமும் சபையோரனைவராலும் கவனத்தோடும் மரியாதை
யோடும் நிச்சயமாய்க் கேட்கப்பட்டது. வர வர பிரசங்
கத்தைக் கேட்கவந்த ஜனங்களின் கூட்டமானது அதிகரித்
து வந்தது. நவீன நாகரீகத்தில் சம்பந்தப்பட்டு ஆங்கி
லப்பள்ளிகளில் பயின்று வரும் மாணாக்கர்களும், பள்ளி
களில் பயின்ற பெரியவர்களும் முற்காலத்திலிருந்தபடி
முன்னூல்களில் கண்டவற்றை தத்துவமென்று ஏற்றுக்
கொள்வது சிரமமாகின்றது. "பைபிள்" என்ற கிறிஸ்தவ

மதக் கிரந்தத்தில் கூறியபடி இன்றைக்கு 6000 வருஷங்களுக்கு முன் ஒரு நாளில் இவ்வுலகமானது திடீரென்று கடவுளால் நிர்மாணம் செய்யப்பட்டது என்ற கதையைப் பௌதிக சாஸ்திரத்தையும், பூகதத்துவ சாஸ்திரத்தையும் படித்தவர்கள் எங்ஙனம் ஏற்றல்கூடும்? அம்மாதிரியே இதர மதக்கிரந்தங்களிலும் கூறப்பட்ட சங்கதிகள் கூறிய வண்ணமே உண்மையென ஏற்றுக்கொள்வது அசாத்தியமாகிறது. இத்தகைய மனப்பயிற்சியுள்ளவர்களுக்கு ஏற்றபடி ஆஸ்திக புத்தியை யுண்டுபண்ணுவதற்குத் தகுந்த ஆசான் இவர். இவர் கேம்பிரிட்ஜ் ஆங்கில சர்வகலாசாலையில் எம். ஏ. விருதுபெற்றவர். ஒவ்வொரு விஷயத்தையும் சாஸ்திரப் பயிற்சியில் தேர்ச்சிபெற்ற மனக்கருவியினால் சரி அல்லது பிசகு என்று பகுத்தறியக்கூடியவர். ஆகையால் இவர் சொல்லும் வார்த்தைகள் நவீனர்களுடைய மனதிற்கு ஏற்றுக்கொள்ளத் தக்கதாயும், சாஸ்திரங்களுடைய கற்பனைகளுக்கு ஒற்றுமையுள்ளதாயும் இருக்கின்றன. ஆகையால் மாணவர்களும் ஆங்கிலம் கற்ற கனவான்களும் பெண்மணிகளும் இவருடைய உபந்யாசங்களை மிகக் கவனமாயும் ஆவலுடனும் கேட்டானந்திக்கிறார்கள். என்பது ஆச்சரியமில்லை.

***

இவ்விருவரும் இவ்விடம் விட்டுப் புறப்பட்டு திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், கும்பகோணம் முதலிய விடங்களுக்கும் சென்று ஆங்காங்கு உபந்யாசங்கள் செய்து அப்பால் தமதிருப்பிடமாகிய அடையாற்றுக்குச் சென்றனர். இவர்களுடன் சிறிதுநேரம் சம்பாஷணை செய்தாலும், இவர்கள் உபந்யாசங்களைக் கேட்டாலும் ஒவ்வொருவரும் பெரும் லாபத்தை யடைந்தவர்களாகிறார்கள். மேலும் சிற்பசாஸ்திரத்தினுடையவும் கலைசாஸ்திரத்தினுடையவும் உண்மைகளை நன்குணர்ந்தவர் ஸ்ரீமான் ஜினராஜ தாஸர். இவர் செய்யும் ஒவ்வொருகாரியமும் திருத்தமாயும் சீராயும்

இருக்கும் சுபாவமுள்ளது. தாம் தங்குமிடமெல்லாம் அழகாயும் திருத்தமாயும் இருக்க வேண்டுமென்றும் அபிப்பிராயப்படுவார். அங்ஙனமே இவர் எழுதும் வாக்கியங்களும் சொல்லும் வார்த்தைகளும் அர்த்த புஷ்டியுள்ளவையாகவும், அழகுள்ளவைகளாயும் இருக்கின்றன. உயர்ந்த எண்ணங்கள் எப்போதும் உலகத்துக்கு ஹிதகாமாயும், சூக்ஷ்மதிருஷ்டியில் பார்க்கக் கூடியவர்களுக்கு அழகிய ரூபங்களுள்ளவையாய்க் காணப் படுவதாலும், சூக்ஷ்ம திருஷ்டியில்லாதவர்கள் கூடப் பெரியவர்கள் சமீபத்திலிருப்பதினாலே பேரின்ப மடைகிறார்கள். ஆகையால் தான் திருமூல நாயனாரும் கூட அடியிற்கண்டபடி கூறுகிறார்.

அறிவா ரமரர் தலைவனை நாடிச்
செறிவார் பெறுவர் சிவதத் துவத்தை
நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்
பெரியா ருடன் கூடல் பேரின்ப மாமே.

***

சென்ற நவம்பர் மாதம் 30 தேதி மாலையில் டாக்டர் ஸர் ஜகதீசசந்திர வஸு என்ற வங்காள பௌதிக சாஸ்திரியார் கல்கத்தாவில் புதிதாய் நிர்மாணம் செய்திருக்கும் தம்முடைய ஆராய்ச்சிசாலையின் 'திறத்தல்' விழாவை இனிது நடாத்தினர். உலகம்முழுவதும் பரவிய இவரது கீர்த்தியைப்பற்றிச் சில மாதர்களுக்கும் முன்னர்க்கூறியுள்ளோம். ஆயினும் இவர் உண்மையான இந்தியர், சிறந்த தேசபக்தர். அன்றுமுதன் முதலாகக் கடவுள் வாழ்த்து சமஸ்கிருத சுலோகங்களாற் கூறப்பட்டபின்னர் தம்முடைய சிஷ்யர்களை ஆசீர்வதித்து வங்காள பாஷையில் ஸ்ரீமான் வஸு அவர்கள் பிரசங்கம் செய்தனர். "இது ரசாயன பௌதிகாதி சாஸ்திர ஆராய்ச்சிச் சாலை யென்பது மட்டுமல்ல; ஸத்தியத்தையே வணங்குவதற்காக நிர்மாணம் செய்யப்பட்ட கோவிலாகும் எப்படி நாலந்தா, தக்ஷசிலை யென்னும் இடங்களில் மூற்காலத்தில் அதாவது 25

நூற்றாண்டுகளுக்கு முன்னர் எத்தேசத்தவரானாலும் யாவரானாலும் வித்தியாசமின்றி சர்வகலாசாலைகளில் சேர்க்கப்பட்டு வித்யையை அப்பியசித்து வந்தனரோ அம்மாதிரியே இந்த ஆராய்ச்சிச் சாலையிலும் எத்தேசத்தவரையும் சேர்த்துக் கொள்ளப்படும். இந்த ஆராய்ச்சிசாலையில் கண்டுபிடிக்கப்படும் உண்மைகளை ஸ்திரீ புருஷர்கள் வித்தியாசமன்னியில் பண்டிதர்களுக்கும் பாமரர்களுக்கும் உபந்யாசங்களாலும் நிரூபணங்களாலும் பரவச் செய்யப்படும். இந்தச் சாலையில் புதிதாய்க் கண்டுபிடிக்கப்படும் உண்மைகளும், யந்திரங்களும், பதிவு செய்யப்பட மாட்டா. ஏன் எனில் ஞானத்தை சுயநலத்திற்கு உபயோகிப்பதும் ஞானத்தை பணத்தை சம்பாதிப்பதற்காக உபயோகிப்பதும் இந்த உயர்நலம் வாய்ந்த பாரதபூமியின் தர்மமல்ல, இவ்விடத்திலிருந்து ஞானமானது உலகெங்கும் பரவட்டும். இவ்விடத்தில் ஆராய்ச்சி செய்வதிலேயே காலமுழுதையும் வித்யார்த்திகள் கழித்து உலகத்தினறிவை விருத்தி செய்யட்டும். இச்சாலையை சாசுவதமாய் மிக்க பயனுள்ளதாகச் செய்ய வேண்டுமானால் ஏராளமான மூலதனம் வேண்டும். ஜனங்கள் எவ்வளவு பொருளுதவி செய்ய முன் வருகிறார்களோ அதற்குத் தகுந்தபடி தாமும் பொருள் தானம் செய்வதாக ராஜாங்கத்தார் வாக்களித்திருக்கிறார்கள். நாமறியாத இரண்டு பம்பாய் வர்த்தகப் பிரபுக்கள் முதன்முதலாக நன் கொடையளித்திருக்கிறார்கள்" என்று கூறியிருக்கிறார்.

*
* *

இவரது ஆராய்ச்சிச் சாலையானது உலகிற்கு அறிவையும், நம் நாட்டுக்குச் சிறப்பையும், யாவர்க்கும் க்ஷேமத்தையும் பயன்று வருமாறு எல்லாம் வல்ல இறைவன் அருள் செய்வாராக.

*
* *

நாளிது டிசம்பர் மீ 25உ முதல் 30உ வரை கல்கத்தாவில் பிரஹ்மக்ஞான சபையின் கன்வென்ஷனானது

கூடும். இவ்வருஷத்தில் "பிரஹ்மஞானியின் வெளி நோக்கம்" என்னும் விஷயத்தைப்பற்றி அடியில்கண்ட நால்வரும் பிரசங்கிப்பார்கள். டிசம்பர்மீ 25-ஆம் தேதி காலை 8—30 மணிக்கு ஸ்ரீமான் வி. ஜினராஜதாஸரவர்கள் "சமயமும் தத்வசாஸ்திரமும்" என்ற விஷயத்தையும், 26-ஆம் தேதி காலை 8—30 மணிக்கு ஸ்ரீமான் ஜி. எஸ். அருண்டேல் "கல்வி"யைப் பற்றியும், 27-ஆம் தேதி காலை 8—30 மணிக்கு ஸ்ரீமான் வாடியா "தேசீய ராஜநீதியும் தேசங்களுக்குள் பரஸ்பரம் நிகழும் ராஜநீதியும்" என்ற விஷயத்தைப்பற்றியும், 28 ஆம் தேதி காலை 8—30 மணிக்கு "ஜனசார சீர்த்திருத்தம்" என்ற விஷயத்தைப் பற்றி கனம் திவான் பகதூர் ஜஸ்டிஸ் டி. சதாசிவையரும் பிரசங்கம் செய்வார்கள். இந்திய "செக்ஷன்" என்ற பிரஹ்மக்ஞான சபைகளின் இந்தியக் கிளையின் வருஷக் கூட்டமானது 25-ஆம் தேதி 12—30 மணி முதல் 2—30 வரையிலும் 26 தேதி 2—30 மணி முதல் —30 மணிவரை கூடும் நக்ஷத்திர சங்கதாரின் கூட்டமானது 28-ஆம் தேதி காலை 7–30 மணிக்கு கூடும். 30-ஆம் தேதி காலை 8—30 மணிக்கு பிரஹ்மக்ஞான சபையின் கன்வென்ஷன் கூடும். அப்போது மேற்படி சபையின் அக்கிராஸனரான மாது ஸ்ரீ அன்னிபெஸண்டம்மாள் அவர்களுடைய பிரசங்கம் நிகழும். அன்று மாலை 7 மணிக்கு வருஷோற்சவக் கூட்டம் கூடும். இந்திய தேசிய வித்யா பீடத்தார் கூடி தேசியக் கல்வி முறைகளைப் பற்றிப் பேசி இந்தியா முழுவதும் கல்லூரிகளை ஸ்தாபிக்கவும் ஸ்தாபிக்கப்பெற்றிருக்கும் கல்லூரிகளை ஏற்றுக்கொள்ளவேண்டிய முடிவான தீர்மானங்களை மேற்கூறிய வாரத்தில் கல்கத்தாவில் செய்வார்கள்.

ஆர். ரெங்கஸ்வாமி ஐயர்.

---

# பிரஹ்மக்ஞான தரிசனம் (பாலபாடம்.)

## அத்தியாயம் 25.

### மனிதசரீர அமைப்பு:—பிராணமயகோசம்—தொடர்ச்சி.

இரவில் அன்னமயகோசம் தூங்கும்போது நாம் இச்சா சரீரம், மானச சரீரம், இவைகளுடன் வெளியே போகிறோம். அப்போது பிராணமய கோசமானது அதன் தோழனை அன்னமய கோசத்தை விட்டுச் சற்றும் விலகாமல கூடவேயிருக்கும். இவ்விரண்டு கோசங்களும் தனித்தனி பலவிதக் கனவுகளைக் காணும். பிராணமய கோசமானது நாம் உலகத்தில் பார்த்திராத விநோதமான சொப்பனங்களையும் அன்னமய கோசமானது முன் நடந்த விஷயங்களை முன்பின் சம்பந்தமில்லாமல் குளறும்படியான சொப்பனங்களாகவும் காணும். (Eolian harp) இயோலியன் என்ற ஒருவித வீணையைச் சுருதிசேர்த்துக் காற்றுக்கெதிரில் வைத்தால் காற்றின் சலனத்திற்குத் தக்கபடி அதில் பலவித கானங்கள் உண்டாவதுபோல் அன்னமயகோசத்தின் மூளையானது பக்கத்திலுள்ள மனிதர்களின் எண்ணங்களை எல்லாம் கிரகித்து அவைகளைத் தன்னுடைய கனவுகளாக நினைத்துக் கொள்ளும். தவிரவும் இரண்டு கோசங்களின் சொப்பனங்களும் ஒன்றோடொன்று கலந்து விபரீதமும் அசந்தர்ப்பமுமான சொப்பனங்கள் உண்டாகும். உதாரணமாக, பிராணமயகோசம் ஒரு வெண்மையான வஸ்துவை நினைக்கும்போது அன்னமயகோசம் ஒருகாக்கையைப் பார்ப்பதாக நினைத்தால் இரண்டும் கலந்து வெள்ளைக் காக்கையைப் பார்த்ததாக சொப்பன முண்டாகும். ஒன்று யாரோ ஒருவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருப்பதாய் நினைக்கும்போது மற்றது ஒரு யானையைப் பார்ப்பதாய் நினைத்தால் இரண்டும் கலந்து யானை பேசினதுபோல கனவுண்டாகும். இவைகள் வாஸ்தவமான சொப்பனங்களல்ல. அன்னமய கோசம் தூங்கும்போது நாம் புவர்லோகத்திலும் சுவர்க்க

லோகத்திலும் அனேக நூதனக் காட்சிகளையும் அறிவு விர்த்திக் கேற்ற பல விஷயங்களையும் பார்ப்போம். பூலோகத்தில் கொஞ்ச காலத்துக்குப் பின்னால் நடக்கப் போகிற சில காரியங்களைப் புவர்லோகத்தில் அறிவோம். அங்கே சில மகான்களைத் தரிசித்து அவர்கள் மூலம் அனேக நன்மைகளை யடைவோம். இவை போன்றவைகள் தான் எதார்த்தமான சொப்பனங்கள். ஆனால் இவைகள் அன்னமய கோசத்தின் மூளையில் தங்க வொட்டாமல் மேற்சொன்ன விபரீதமும் அசந்தர்ப்பமுமான சொப்பனங்கள் தடை செய்கின்றன. ஒரு சமயத்தில நிஜமான சொப்பனங்களில் ஒன்று மிகவும் பலமாய் அன்னமய கோசத்தின் மூளையில் பதிந்து நாம் விழித்துக் கொண்டவுடன் ஞாபகத்துக்கு வரும்.

பிராணமயகோசம் அன்னமயகோசம் போலவே ஒரே மாதிரியா யிருப்பதால் சாத்வீக ஆகாரத்தினால் அன்னமய கோசம் அதிக லக்ஷணமுள்ளதாக வாகும் போது பிராணமய கோசமும் அப்படியே லக்ஷணமுள்ளதா யிருக்கும். தாமச ஆகாரங்களால் அன்னமய கோசம் பருப்படியாகவும் அவலக்ஷணமுள்ளதாகவும் ஆகும்போது பிராணமயகோசமும் அப்படியே ஆகும். அன்னமய கோசம் இறந்து போனவுடன் புதைக்கப்பட்டுப் புதைகுழியில் நாளடைவில் க்ஷீணித்துக்கொண்டு வரும் போது அதைச் சுற்றிக் கொண்டிருக்கிற பிராணமய கோசமும் அவ்விதமே க்ஷீணித்துக்கொண்டு மகா விகாரமான தோற்றமுள்ளதா யிருக்கும். இவ்வுருவங்களைப் பார்த்தவர்கள் இவைகளை பேய் பிசாசுகளென்று நினைத்து அனேக கதைகள் எழுதியிருக்கிறார்கள். இதை உத்தேசித்தே நம் முன்னோர்கள் தகனம் செய்வது உத்தமமென்று சொல்லியிருக்கிறார்கள்.

சில தேசங்களில் பிரேதங்களைத் தகனம் செய்யாமலும் புதைக்காமலும் ஒருவித மருந்திட்டு என்றைக்கும் அழியாம லிருக்கும்படி பந்தோபஸ்து செய்து வைக்கும் வழக்க மிருந்தது. இவ்வழக்கம் சுமார் ஐயாயிர வருஷங்களுக்கு முன் எகிப்து தேசத்திலிருந்தது. இப்படி

பந்தோபஸ்து செய்து வைக்கப்பட்ட பிரேதங்களுக்கு மம்மிகளென்று பெயர் இந்த மம்மிகளாகிற அன்னமய கோசங்கள் அழியாமலிருப்பதால் அவைகளைச் சேர்ந்த பிராணமயகோசங்களும் அழியாமல் அவைகளைச் சுற்றிக்கொண்டும் அவைகளை எங்கே கொண்டுபோனாலும் பிராணமய கோசங்களும் கூடவேபோகும். இவ்வித மம்மிகள் அனேகம் லண்டன் பொருட்காட்சிச் சாலையிலிருக்கின்றன.

இக்காலத்திலும் சிலருக்கு சூக்ஷ்மதிருஷ்டி யுண்டாயிருக்கிறது. அவர்களுக்குப் பிராணமய கோசங்கள் வியக்தமாய்த்தெரிவதுடன் புவர்லோகத்தையும் அதில் வசிப்பவர்களையும்பார்க்கிறார்கள். இந்த திருஷ்டியானது ஒருவனுக்கு நூதனமாயுண்டானவுடன் அவன் பலவித சங்கடங்களுக்கு உள்ளாகிறான். க்ஷீணித்துக் கொண்டிருக்கிற ஆபாசமான தோற்றங்களுள்ள பிராணமயகோசங்களையும் சிலவிகாரரூபமுள்ள புவர்லோகவாசிகளையும்கண்டு பீதியடைகிறான். இவனுக்குத்தகுந்த குரு மூலமாகவாவது பிரஹ்மக்ஞான புஸ்தகங்கள் அல்லது வேறு சாஸ்திரங்கள் வாயிலாகவாவது இவைகளைப்பற்றி ஞானம் ஏற்பட்டாலொழிய இந்த திருஷ்டி தனக்கு வராமல் இருக்கக்கூடாதா வென்று நினைப்பான். இப்படிநினைப்பது மிகவும் தப்பிதம். ஏனெனில் அவன் புவர்லோகத்தில் மகா ஆனந்தமான காட்சிகளையும் சில மகான்களையும் பார்க்கக்கூடும். எப்படி ஒருவன் பூலோகத்தில் ஆபாசமான காட்சிகளைக் காணும்போது தனக்குக் கண்ணில்லாமலிருக்கக் கூடாதாவென்று நினைப்பது தப்பிதமோ, அப்படியே திவ்விய திருஷ்டியுண்டானவன் நினைப்பது மாகும்.

வி. வெங்குசாமி ஐயர்.

---

# தேகபலத்தின் இன்றியமையாமை.

ஞானத்தை யபிவிர்த்தி செய்தற்குக் கல்வி எங்ஙனம் சாதனமாயுளதோ அங்ஙனமே தேகசக்தியை யபிவிர்த்தி செய்தற்குத் தேகப்பயிற்சி சாதனமாயுளது. உலகில் ஒவ்வொருவரும் பயிலவேண்டிய பயிற்சிகளுள் சரீர விஷயமாய்ப் பயிறலுமொன்றும்.

இஃதிங்ஙன மிருக்க இப்பொழுது பலர் இத்தேகமோ அநித்தியம்; இதனைப் பலப்படுத்த வேண்டிய அவசியமென்; இவ்வநித்திய சரீரத்தைப் போஷித்து வளர்த்துக் கொழுக்கச் செய்வதினும் ஞானமார்க்கத்தினின்று நாம் பிறந்த பயனை அடைய முயலுவதே மேன்மை; என்பன வாதியாகப் பலவாறு கூறித் தம் தேக சுகத்தைச் சிறிதும் கருதாராய் மிகவும் அலக்ஷியம் செய்கின்றனர். இதுவுமுண்மையே. இக்கொள்கையை யான் ஒரு சிறிதும் மறுக்க வல்லேனல்லன். ஆயின் இங்ஙனம் மேற்கூறியவாறு வாதாடும் பெரியோர் யான் பிற்கூறும் சில வசனங்கட்குச் சிறிது பொறுமையுடன் செவி கொடுப்பாராயின் அவர்க்கு இத் தேகப் பயிற்சியும் ஒருவாறு இன்றி யமையாததாகவே தோன்றுமென நினைக்கிறேன்.

மானிட ராகவரலரிதென்பது யாவரு முணர்ந்த விஷயமாம். ஆதலின் மானிடராய்ப் பிறக்கும் பாக்கியத்தைப் பெற்றோரும் தாம் நல்லொழுக்க நன்மார்க்கங்களைக் கடைப்பிடித்து ஞான மார்க்கத்தில் நின்று மோக்ஷத்தை யடைதற்குக் காரணமாயிருப்பது சரீரமேயன்றோ? இச்சரீரத்தைப் போஷிக்காமலும் நன்கு பலப்படுத்திப் பாதுகாவாமலும் அசட்டை செய்து வருவோர் விரைவில் தேகந்தலைந்து நரம்பு தளர்ந்து அசௌக்கிய மடைந்து பிணிக்கிடமாகிப் பின் கூடிய சீக்கிரத்தில் தம்முடம்பை வீழ்த்திச் செல்லுவரொன்பதில் யாதையமுளது? ஆகவே இங்ஙன மிறந்தோர் தாமுலகிற் பிறந்தபயனை எங்ஙனம் பெற்றவராவர்?

ஒருவன் நித்திய வஸ்துவாகிய கடவுளினுண்மையை யறிதற்கு அநித்திய வஸ்துவினுதாரணமே சாதனமாயிருப்பது போல் நித்தியப்பொருளாகிய பரத்தையடைதற்கு அநித்தியப்பொருளாகிய இத்தேகமன்றோ சாதனமாயுளது? அன்றியும் சுவரின்றிச் சித்திரமெங்காம்? நிற்க.

இனிச் சுயநலவாசை சிறிதுமின்றிப் பிறர்க்குத் தம்மாலியன்ற உதவிகளைச் செய்து அவரின்புறத் தாமின்புறுங் குணம் இவ்வுலகிற் பிறந்த யாவர் மாட்டும் பொருந்தியிருக்கவேண்டுமென்னும் உயர்ந்த கொள்கை எவரானும் மறுக்கற்பாலதன்று. இதைக் கடைப்பிடித்துப் பிறர்க் குதவி புரியவேண்டுமென்றும் கருத்துடையராய் ஒருவர் பொருளானுதவுதல் என்றும் சாத்தியமாகாது. ஒருக்கால் சாத்தியமாயினும் அஃது நீடு நிலைக்காதென்ப துறுதி. ஆனால் இச்சரீர வுதவியோ இத்தேக விறுதிகாறும் நிலைக்கும். இவ்விதமாகத் தேகத்தால் நம்மாலியன்ற வுதவிகளைச் செய்வதற்கும் தேகபலம் வேண்டுவது அத்யாவசியமாகவுளது. இதுவுமன்றித் தேச நன்மைக் குழைக்கப்பேராவாக் கொண்டுள்ள வொருவன் ஒரூரிலிருந்து மற்றோரூருக்கும் ஒரு தேயத்திலிருந்து மற்றொரு தேயத்திற்கும் அடிக்கடி செல்லவும் ஆண்டாண்டு பெருமுயற்சியுடன் தான் செய்யவேண்டிய கடமைகளைச் செய்து முடிக்கவும் சாதனமாயிருப்பது இத்தேக பலமொன்றேயன்றோ? பரோபகாரச்சிந்தனையே யென்று முடையனாய்ப் பிறரை நல்வழிப்படுத்தி உயர் நிலையிலேற்றுவிக்கு முன்னதக் கருத்துடையனைச் சுயநலத்திற் பற்று சிறிதுமின்றிப் பரநலத்தில் தனக்குள்ள அவா மிகுதியால் தன் சரீரப் பிரயாசையையும் அசௌக்கியத்தையும் சிறிதும் பொருட்படுத்தாது தனக்கவகாசமுள்ள போதெல்லாம் பிறர்க்குப் போதித்தும் பல விடங்களிலும் சென்றுபந்நியசித்தும் வரும் வழக்கத்திலிருக்கு மொருவன் பின் தான் செய்த முயற்சி காரணமாகக் கூடிய விரைவில் இருமல் க்ஷயம் முதலிய பிணிகளால் பீடிக்கப்பட்டுத் தான் பிறந்த பயனைமுற்று மடையு முன்னரே காயிற் பழுத்த பழம்போல் பருவமல்லாப்பருவத்தில் தன்

னுடம்பை வீழ்க்கிக் காலஞ் செல்வான் என்பதை உறுதியாகக் கூறலாமன்றோ? ஆதலின் ஒருவன் தேகத்தைப் பல விதப் பயிற்சிகளினால் பலப்படுத்தி வந்தால் எவ்வித இடையூறுக்கு முட்படாமல் தான் செய்யவேண்டிய காரியங்களை யெல்லாம் சிறிதும் வழுவறச் செவ்வனே நடத்தி வருதற் கேற்றவனாவான் என்பது திண்ணம்.

முற்காலத்தில் நம் நாட்டில் ஒவ்வொருவரும் சரீராப்பியாச பலத்தினால் குஸ்தி செய்தல் கத்தி சுழற்றல் சிலம்பு வீசல் முதலிய அற்புத வேடிக்கைகளையெல்லாம் வேந்தவையிற் காட்டி அரசரால் நன்குமதிக்கப்பெற்றும் அவரால் பரிசளிக்கப்பெற்றும் வந்தனர். இக்காலத்திலோ அதற்கு முற்றிலும் மாறாக அங்ஙனம் பயில்வோருமின்றி ஆதரிப்போருமின்றாயிற்று.

ஆதலின், தேகப்பயிற்சியினாலுண்டாம் பயனை மேற்கூறிய காரணங்களைக் கொண்டுணர்வதோடும் கீழ்வரும் சில வாக்கியங்களாலும் நன்குணர்ந்து இனியேனும் நாமும் அங்ஙனம் பயில்வதுடன் நம்மை யடுத்தோரையும் பயில்வித்து நம் தேச மாந்தரனைவரையும் பூர்வ நிலைமையடைவிப்பது நமது கடமையாம்.

பெற்றோர்களுடைய சரீர நிலைக்கும் சக்திக்கும் ஏற்றபடியே புத்திரர்களும் பிறப்பதை நாம் நன்கறிகிறோம். திடகாத்திரராயுள்ள அநேகர் திடசரீரமும் தேகவன்மையுமுள்ள புத்திரர்களைப் பெறுகிறார்கள். தேகக்கட்டும் காத்திர திடமுமற்ற பெற்றோர்க்கு நிலத்துக்கேற்ப முளைக்கும் பயிர்போல நொந்துமெலிந்த தேக முடையராயும் வற்றிய வோலைபோற் சிறிதும் பசையற்றவராயும் புத்திரர்கள் உற்பவிக்கின்றனர். அங்ஙனம் பிறந்து வளர்ந்த புத்திரர் இவ்வுலகிற்கு யாதுபகாரத்தைச் செய்யப் போகின்றனர்? அத்தகைய புத்திரர்களைப் பெற்றோருக்குத் தான் யாது பயனுண்டாம்? ஆகையால் ஒவ்வொருவரும் தம்பயனையும் பிறர் பயனையும் உலகப்பயனையும் கருதி தேக பலமிக்க மக்

ஓர் விஷயத்தை நிரூபிப்பதற்கு நம்மாற் காணக்கூடாததும் சுலபசாத்தியமாகாததுமாகிய உதாரணங்களை யெடுத்துக் காட்டுவதைவிடப் பிரத்தியக்ஷாநுபவத்திலிருப்பகளைப் பெறவேண்டுமென்னும் கருத்துடையராய்த் தம்தம் தேகங்களைப் பலவித அப்பியாசங்களாலும் பலப்படுத்துவாராக.

தும் அடிக்கடி நம் கண்ணெதிர்ப்படுவதுமாகிய உதாரணமுகத்தால் நிரூபிப்பதே மிகவும் விரும்பத்தக்கதாம். ஆதலின் அவ்வாறே ஈண்டும் இத்தேகப்பயிற்சியின் இன்றியமையாமையையும் அதனால் நாம் பெறும்பயனையும் பற்றி நம் அநுபவத்திற் காணக்கூடிய மிக வெளிதாகிய உதாரணங்களை வைத்துக்கொண்டே பேசுவோம்.

ஒருவன் மற்றொருவனோடு சண்டையிட்டு அடிதடியோடு நிற்கும் அபாயகரமான சம்பவத்தைக் கண்டிரங்கிய ஒருவன் தான் சரீர பலமில்லாதவனாயிருப்பின் அவ்விருவரையும் தனித்தனி விலக்கி அவர்களைச் சமாதானப்படுத்த முயறலெங்ஙனம்? தவிர பலஹீனனொருவன் தன் வீட்டினும் அயல் வீட்டினும் தீப்பற்றி யெறியக்கண்டால் அதனை அவ்வாபத்தினின்றும் நீக்குதற்கு முயறல், தன்னோடு வெளிப்பிரயாணம் போந்த நண்பன் உதவியில்லாமல் இடைவழிக்கண் அகாலமரணத்தால் இறப்பானேல் அத்தோழனை மனித சஞ்சார ஸ்தலத்திற்குத் தூக்கிச் சென்று செய்ய வேண்டிய கிரியைகளைச் செய்தல், நாட்டையேனும் இராஜ்யத்தையேனும் எதிர்க்க வந்த வேற்றரசர் படையைத் தோற்கடித்து வெற்றி பெற முயறல், இன்னும் இத்தேக பலத்தால் முடிக்கவேண்டிய யாவற்றையும் அஃதில்லாவிடின் எங்ஙனம் முடித்தலியலும்?

இங்ஙனம் மேற்கூறிய சரீரபல மின்றியமையாததென்பதற்குள்ளவாகும் ஏதுக்கள்பலவாம். அவற்றை யெல்லாம் ஒவ்வொருவரும் தம் தம் பிரத்தியக்ஷாநுபவத்திற் கண்டு தேர்ந்துகொள்வாராக. நிற்க; இனி இத்தேகப்பயிற்சிக்

குரியவிதி, இடம் காலம் முதலியவற்றைப்பற்றிச் சிறிதாராய்வோம்.

தேகத்தைப் பலப்படுத்தற் பொருட்டுத் தண்டால் பஸ்கி நடைப்பயிற்சி முதலிய அப்பியாசங்கள் செய்வதுடன் கவாத்து (Drill) செய்தலும் இணைமரம் (Parallel bars) குதிரை மரம் (Horse-bar) இரு கம்பங்களின் குறுக்கேயிட்ட இரும்புக்கம்பி (Horizontal bar) முதலியவைகளிற் பலவித அப்பியாசங்களைப் பயிறலும் உண்டு. கைகளைக் கீழேயூன்றிக் கால்களை மேலே தூக்கிநிற்றலும் அந்நிலையிலேயே நடத்தலும் இன்னும் தரையிற் செய்யத்தக்க பலவித கரணங்களும் செய்வதுண்டு. மேற்கூறிய இப்பலவித அப்பியாசங்களுள் ஒவ்வொன்றும் சரீரத்தின் ஒவ்வொரு பாகத்தையும் பலப்படுத்துவதை அவற்றைப் பயின்று வருபவர் தம் தம் அநுபவத்திலறிவர். இப்பயிற்சிகளைப் பயில்வதில் கவனிக்க வேண்டிய விதிகள் பல வுண்டாம்.

(1) இவைகள் பழகுமிடம் பரிசுத்தமாயும் மனோரம்மியமானதாயும் காற்றுப் போக்குவரவுள்ளதாயும் சுத்தாகாயம் உலவுவதாயு மிருக்கவேண்டும். ஒருவன் செய்ய வேண்டிய அப்பியாசங்களை இப்படிப்பட்ட விடங்களைத் தேடிச் செய்யாதுதான் நினைத்தவிடங்களிற் செய்யப் புகுவானேல் அவ்விடங்களிலுள்ள அசுத்தவாயு தன்மேற்பரவி வியர்வையோடுட் சென்று நோய் முதலியவற்றை யுண்டாக்க அதனாற் குளிக்கச்சென்றவன் சேற்றைப் பூசிக்கொண்டாற் போலாவான்.

(2) தவிர முன்சொன்ன ஒவ்வொரு பயிற்சியையும் பயிலும்போது மூச்சை யுள்ளடக்கியே செய்யவேண்டும். உதாரணமாக:—ஓர் அப்பியாசத்தைச் செய்ய ஒருவன் எண்ணங்கொண்டால் முன்னர்த் தன்னுள்ளிருந்த மூச்சு முழுவதையும் இரேசித்து (வெளியேற்றி) விட்டு உடனே புதியகாற்றைப் பூரித்து (உள்ளிழுத்து) அதன்பின் தான் கருதிய அப்பியாசத்தை யாரம்பித்துப் பின்பு அவ்வப்பி

யாச முடிவில் தான் முன்னுள் நிறுத்திவைத்திருந்த வாயு
வை வெளியில் விட்டுவிட வேண்டும்.

அதாவது ஒருவன் தனது அப்பியாச வாரம்பத்தி
லுள்ளிழுத்த மூச்சை அஃது முடியும்வரை உள்ளேயே
கும்பித்து வைத்திருக்கவேண்டும் என்பது.

இவ்வாறு செய்யும் இரேசக பூரக கும்பக முறையே
பிராணாயாமம் எனப்படும்.

முற்கூறியவண்ணம் வாயுவை உள்ளிழுத்தலும் வெளி
விடுத்தலும் மிகவும் மெதுவாக நாசியின்மூலம் செய்ய
வேண்டுமேயொழிய வாயினாற் செய்தல் தகாது.

(3) இங்ஙனம் அப்பியாசம் பண்ணினவுடனே நீரே
னும் உணவேனும் அருந்தலாகாது.

அன்றி உணவுண்ட தக்ஷணமே முன்னர்க்கூறிய அப்
பியாசங்களைச் செய்தலும் தகாது.

தவிர எள்ளளவும் ஆகாரமின்றி வெற்று வயிற்றோ
டிருக்கும்போதும் பசியோடிருக்கும் போதும் அப்பியாசம்
பண்ணலாகாதென்பதும் மிகவும் கவனிக்கத்தக்கது.

(4) காலை நாலரை மணியிலிருந்து ஆறரை மணிக்
குள்ளாக ஒருவன் தனக்குச் சௌகரியப்பட்ட போது
எவ்வப்பியாசத்தையும் பயிலலாம்.

(5) மற்றும் அப்பியாசம்பண்ணும் பொழுது நம்
கவனம் முழுவதும் நாம் செய்யும் பயிற்சியின்கண்ணே
செலுத்தவேண்டும். ஏனெனில் நாம் ஒரு செய்யுளை நெட்
டுருப்பண்ண வேண்டுமானால் நம் முழு மனதையும் அச்
செய்யுளின்கண் ஒருமுகப்படுத்திப் படித்தால்தான் அஃது
சாத்தியமாமேயன்றி மனதைப் பலவாறு சிதறவிட்டு எத்
தனையோமுறை அச்செய்யுளை நாம் திரும்பத் திரும்பப்
படித்துக் கொண்டேயிருந்தாலும் அஃது மனப்பாட
மாகாதென்பது நம்மியாவர்க்கும் சொந்த அநுபவத்தி
லுள்ளதாகியவோர் விஷயமல்லவா? இதிலிருந்து மனதிற்
கு ஓர்வித அபாரசக்தி யுண்டென்றும் அம்மனம் ஏகாக்கி

ரப்பட்ட விடத்தன்றி நாம் கருதியகாரியம் கைகூடாதென் றும் நாமறிகிறோமன்றோ? ஆதலால், அதுபோலவே தேகாப் பியாசம் பண்ணும்போதும் மனதை அவ்வப்பியாசத்தின் கண்ணே செலுத்தினாலன்றி அதன்பயனை எளிதிற் பெறலரி தாம்.

பொதுவாக எல்லாவித தேகாப்பியாசங்களிலும் கவ னிக்க வேண்டிய விதிகள் இவ்வாறிருக்க, இனிக் கைவரி சைக்கருவி (Dumb—Bells) யப்பியாசத்தைப்பற்றியும் மிகச் சிறுகக்கூறிவிடுவல்.

இக்கைவரிசைக் கருவியப்பியாசமும், இதற்குரிய விதிகளைப் பின்பற்றியொருவன் தினமும் பயின்றுவந்தால் மற்றைய அப்பியாசங்களைப் போலவே உடம்பு முழுதிற் கும் பலததைக் கொடுப்பதும் தவிர சரீரசுகத்தையும் விருத்திபண்ணும் என்பதற் ஐயமில்லை.

நடைப்பயிற்சி செய்தலும் மிகவும் உத்தமமான அப் பியாசமேயாகும்.

இங்குக்கூறிய கைக்கருவி யப்பியாசங்களிற் சிலவும் நடைப்பயிற்சியும் ஆடவர்க்கும் பெண்டிர்க்குமொப்பவுரித் தாம்.

பெண்கள் தேகாப்பியாசம் செய்வதனால் அவர்கள் தம் கருப்பாசயத்தில் யாமோ சில வகையான தீங்குகள் நே ரிடுகின்றன வென அநுபவிகள் வாயிலாகக் கேள்வியுறு கின்றமையாலேயே மேல்வாக்கியத்தில் கைக்கருவி யப்பியா சங்களிற் சிலமாத்திரமே பெண்களுக்கு உரியன வென்னும் கருத்துப் படும்படி கூறினன்.

அன்றி மேற்கூறிய கைக்கருவி யப்பியாசம், நடைப் பயிற்சி ஆகிய விரண்டனுள்ளும் நடைப்பயிற்சி பெண்டிர்க் குப் பலவிதத்திலும் உத்தமமும் எளிதுமாகிய தொன்றும். இவை பயிலும் போதும் மனதை அப்பியாசத்தின் கட் செலுத்தல்; இரேசக பூரக கும்பக முதலிய முன் சொன்ன விதிகளைக் கடைப்பிடித்தல் இவற்றையெல்லாம் முக்கிய மாக யாவரும் கவனித்தல் வேண்டும். இதுநிற்க.

இனி உதைபந்து (Foot Ball) கிரிக்கெட் (Cricket) டென்னிஸ் (Tennis) பேட்மின்டன் (Badmintan) முதலிய இவ்வாங்கில விளையாட்டுகளிற் பயிலுமொருவர்க்கு ஓட்டமும் ஆட்டமுமே தன் பயனைக் கண்டோமேயன்றி அவற்றாற் சரீர பலமடைந்து நன்மை பெற்றவரொருவரை யாவது இதுகாறும் காணேமாகையால் அவ்வாடல்களிற் செலுத்தும் காலத்தை யாவரும் முன்னர்க்கூறிய தேகாப்பியாசங்களிற் செலுத்தினால் மிகுந்த நன்மையை யடையலாம் என்பது எனது அபிப்பிராயமாகும். ஆயின் இவ்விளையாட்டுகள் வேலைசெய்து களைத்த உத்யோகஸ்தர்களுக்கும் படித்துச் சோர்ந்த மாணவர்களுக்கும் மற்றும் ஏதேனும் ஓர் காரணத்தால் மனங்கவல் உற்றார்க்கும் முறையே அவர்களது களைப்பு சோர்வு கவலைகளை நீக்கி தம்முள்ளத்தின் கண்ணேர்விது வுற்சாகத்தை யுண்டுபண்ணக் கூடியவை யென்பதையும் மறுக்கத் துணியேன்.

நிற்க. நாம் இட்டபணி தவறாதியற்றி நாம் செல்ல விரும்பிய விடங்கட்கெல்லாம் நம்மைத் தூக்கிச் சென்று நமக்கு ஓர் அடிமைபோல் உழைத்து நமக்கென்றும் உதவா நிற்பதுமன்றிப்பரம் பொருளை நாமடைதற்கேற்ற முக்கிய சாதனமாயும் நிற்கும் நம் சரீரம் விரைவிற் பலங்குன்றி க்ஷீணதசையடைந்துவிடாமல் மிகவும் பாதுகாப்புடன் போற்றிப் போஷித்துப் பலவேறு வகைப்பட்ட பயிற்சிகளாலும் பலப்படுத்தி அதனை, என்றும் நிலைத்து எங்கும் பரவி நின்ற இறைவனது திருவடியை யாம் இனிதடைதற்கேற்றதோர் உறுதியாகிய கருவியாக்கிக் கொள்வோமாக.

டி. எம். மொஹைதீன்,
உதவித்தமிழ்ப் பண்டிதர்,
மதனப்பள்ளி.

# முதல் சாதனம்.

முதல் சாதனமாவது, நித்திய வஸ்து எது, அநித்திய வஸ்து எது வென்றுணர்ந்து, அதினின்றும் ஞானம் பெறுதல்; சுருதி, யுக்தி, அனுபவம், கொண்டு நிச்சயம் செய்தல். ஒரு தன்மைப்பட்ட இரண்டு ஒன்றுசேர்ந்து கருவாகிறது, அக்கருவும் நித்தியமில்லாமல், உருவாய் மாறுகிறது, பின் சிசுவாய்ப்பிறக்கிறது, பால்யம் அடைகிறது, யௌவனம் பொருந்துகிறது, விருத்தாப்பியம் சேருகிறது, அதையும் பிரிகிறது.

இருள் மாய்கிறது, சூரியன் ஒளிக்கிறது. காணப்பட்டன வெல்லாம் ஒரு வழியின்றி பலபேதப் படுகின்றன, போகின்றன, வருகின்றன. அனுபவிக்கப்படுகின்றன வெல்லாம் ஒரு நிலையின்றி சேருவதாய், அழிவதாய், போவதும், வருவதுமாய் மாறுகின்றன. கேழ்க்கப்பட்டன, ஒரு தன்மையனவா யில்லாமல் ஒன்றையொன்று உயர்வுதாழ்வைக் காட்டித் தோன்றி மறைகின்றன. முகரப்படுவன ஒருநிலையில் உயர்வும், ஒரு நிலையில் தாழ்வும் காட்டுகின்றன. ஒழிகின்றன. உண்ணப்படுவன, பேசப்படுவன துன்பமும் இன்பமும் சுகமும் அசுகமுமெனக் கழிகின்றன. இப்படி உலக காரியமாய், இந்திரியங்களால் கொள்ளப்பட்டன யாவும் அநித்தியமாகின்றன.

இனிப் பிரபஞ்சகாரணமாகிய அந்தக்காரணங்களால் கொள்ளப்படுகின்ற நினைவும், நிதானிப்பும், சிந்தனையும் அகங்காரமும், வினடிகளைக் கூடப்பாகித்துக் கொண்டு தோன்றி நிலையின்றி மறைகின்றன. சொல்லுமிடத்து நாமரூபமுடையவைகளாய இந்திரியானுபவங்களும், அந்தக் கரணத் தோற்றங்களும், தோன்றி மறைகின்றன. இம் மாதிரியான விசாரணையால் ஞானம்பெறுதலே அநித்திய வஸ்து விவேகமாகிறது.

நித்தியவஸ்து விசாரணைசெய்வதில், இருளிலிருந்து ஒளியையும், தீமையிலிருந்து நன்மையையும், அசுகத்திலிருந்து சுகத்தையும், தாழ்விலிருந்து உயர்வையும், காணுதல்போல் அநித்தியத்திலிருந்து நித்தியமும், துன்பத்திலிருந்து இன்பமும் காணவேண்டியதாகிறது.

இந்திரியானுபவங்களெல்லாம் பொய்யென்றும்; அந்தக்கரணங்களைப் பந்திப்பனவெல்லாம் பொய்யென்றும் கண்டதும் நித்திய வஸ்துவானது இவற்றையெல்லாம் விலகிய ஓர் பொருளென்று யூகிக்க இடந்தருகிறது. அப்பொருள் மற்றவைகளைப் பொய்யென்று கண்டு தனித்து நிற்கிறது. இதனால் பொய்யென்று மற்றவைகளைக் கண்ட அப்பொருள் தன்னை மெய்யென்று முற்றும் தெரிந்துகொண்டதாய் நினைக்க முடியாவிட்டாலும்; தன்னை மெய்யென்று சொல்லாமல் சொல்லிக்கொள்வதுபோல் தனித்து நிற்கப் பிரியப்படுகிறது. இந்த நிலைமையில் அது நித்தியவஸ்து எது? எப்படியுள்ளது? எப்படியதையறிவது? என்று தன்னை உசாவி அதனைக் காணமுயற்சிப்பதுபோல் விளங்குகிறது. அப்பொருள் யார்? உண்மையை விசாரிக்கிற அப்புருடன் யார்? அவன் எப்படியுள்ளவன்? என்ற விசாரணையைக் கலந்துகொள்ளாமல் அவனால் விசாரிக்கப்பட்ட ஞானம் பயனற்றதாய் முடியலாம். அது, அப்பொருள், அப்புருடன், அநித்திய வஸ்துக்களிலிருந்த (விசாரணையால் பிரிக்கப்பட்ட) சத்துக்கள் தன்னையெழுப்ப நித்தியாநித்திய பேதம் உணர்ந்து எழுந்த அப்பொருள் "உணர்ச்சியே" யாம்.

அது தன்னைமுற்றும் உணர்ந்ததா? இல்லை. ஆனால் ஓர்வாறாய் தன்னை உணரத் தலைப்பட்டுவிட்டது என்றே சொல்லலாம். தான் அறியவேண்டிய நித்தியவஸ்து விவேகத்தைப் பெற்ற பிறகே தன்னைவிசாரிக்கத் தீர்மானமாய் ஆரம்பித்திருக்கிறது என்று சொல்லவேண்டும். இப்படி நித்திய வஸ்துவை விசாரித்தற்கு அநித்திய வஸ்துக்களின் சாரமே, அவை

களின் நுண்ணிய அம்சங்களை, அதற்கு உதவி. அவ்வுதவி கொண்டேதான் அறியவேண்டியதாய் பாக்கியாய்க் கிடக்கும் நித்திய பாகத்தை, தன்னுருவின் மற்றோர் பாகத்தை, அறியவேண்டும்.

ஆதலின் நித்திய வஸ்துவை அறிகிறதற்கு அநித்திய வஸ்துகளில் பொதிந்து கிடக்கும் நுண்ணிய அணுக்கள், பரமாணுக்கள், உதவிசெய்கின்றன. அல்லது இப்படி விசாரித்தறிகிற பரமாணுக்கள் ஒன்றுசேர்ந்தே நித்திய வஸ்துவை ஸ்திரப்படுத்துகின்றனவென்னலாம். அவைகள் உணர்ச்சியை எழுப்புகின்றன என்று சொல்லலாம். ஆதலின் உணர்ச்சி தன் பூரண பாகத்தைப் பெறுகிறவரையில் இந்திரியாதி அந்தக்கரணங்களால் கொள்ளப்படும் பிரபஞ்சானுபவம் வேண்டியதே, விலக்கமுடியாததே. ஒவ்வொன்றிலும் விசாரிக்கில் ஞானம் விளங்குகிறது, அநித்தியத்துவம் பிரிக்கப் படுகிறது.

அநித்தியத்திலிருந்து பிரிக்கப்பட்ட சாரங்கள் உணர்ச்சியை இடித்து இடித்து எழுப்ப அவசியம் என்று கண்டபோது அவைகள் பூரண உணர்ச்சியையும் ஏன் எழுப்ப முடியவில்லை. ஆனால் அது நித்தியமா? அல்லவா? நித்தியம், அநித்தியத்தில் காணக்கிடந்த நித்தியம்

இந்த உண்மையைக்கொண்டு உணர்ச்சி பூரணத்தை அடைய முயற்சிக்கும் போது ஏன் சித்திபெறவில்லை? உணர்ச்சியை பந்தித்திருக்கும் திரியாவஸ்தையே காரணம். இதனால் உணர்ச்சிக்குப் பூரண ஞானமாகிய அமுத ஔஷதம் செலுத்தப்பட்டாலன்றி ஞானங்கள் பூரணகுணத்தைச் செய்யமுடியவில்லை. சாக்கிராவஸ்தையில் உண்ட ஞான ஔஷதம் சொற்பனவஸ்தையில் காரம்செத்தும் சுழுத்தியில் உருவின்றி அழிந்தும் போகிறது. எப்படி? சாக்கிரத்தில் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உணர்ந்த, உண்மைகள் சொற்பனத்தில் மறைந்தும் சுழுத்தியில் இறந்தும் போகின்றன. இதனால் ஓய்வின்றி அனுபவிக்கப்பட்

டாலன்றி நாம் தேடி எடுத்த ஞானங்கள் படிப்படியாய் ஒளிக்கின்றன. ஆனால் தேன் பூச்சிகளைப்போல் விடா முயற்சியுடையோர் சேகரித்தும் ஞானங்கள் அழியாதன போல் இடையிடையே தோன்றுகின்றன. இப்படிச் சேக ரிக்கப் பட்டவைகளால் இதனை யனுசரித்து யியற்கையாய் வந்து பொருந்தும் பேறிவால் சுழுத்தி சொற்பனங்கள் ஒழியப்பெறலாம். பின் அற்பஞானமும் பெருஞானமாய் விளங்கும்.

ஞான உணர்ச்சியின்றி சனன மரணவஸ்தைகளில் மடங்கிக் கிடந்தும் "உணர்வு" இல் ஞானங்களால் எழுந்து எழுந்து அயர்ந்து போகிறது. இதனால் நிச்சயவஸது தீர் மானிக்க முடியாமலிருக்கிறது. பின் எப்படி எந்த பூரண ஞானத்தால் உணர்ச்சியை அயர்வினின்று எழுப்பி பூரண ஞானத்தை, நித்தியவஸ்து உண்மையை, அறியும்படிச் செய்வது? அஃது ஏனைய மூன்று சாதனங்களின் வழி இழுத்து எழுப்பி நான்காம் சாதன தீவிரத்தால் அதனை அயர்வின்றிச் செய்து ஞானாசாரியரிடம் ஒப்புவிப்பதே. இதனால் உணர்ச்சிதான் பல்லூழியாகப்பட்டு வரும் துன்ப மயக்கத்தால் வந்த அறியாமை, சோம்பல், வெறுப்பு, மறதி, இவைகளை ஒழித்து அறிவின் ஒளிமயமாக்கலாம். பின் நம் முயற்சியில்லை. ஆகலின் உணர்ச்சியை இடித் தெழுப் பும் ஞான நூலாராய்ச்சியும் சற்சங்க சகவாசமும் பெரி யோர் வணக்கமும், சோம்பலின்றி, ஓயா, ஒழியா, முயற்சி யும் உணர்ச்சியை முற்றும் எழுப்பி உண்மையைத் தேடச் செய்கிறது.

கமலத்தன்னை.

---

# சிறுதேவதைகட்கு உயிர்ப்பலி இடலாமா?

எவ்வுயிரும் என் உயிர் போல் எண்ணி இரங்கவும் நின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே.

—தாயுமானசுவாமி.

கல்வியறிவும் நல்லோர் சேர்க்கையும் இரக்கமான நெஞ்சமும் இல்லாமையால், மிகப்பவுந் தாழ்ந்தநிலைமையிலுள்ள மனிதர்கள் தாம் தாம் தமது குலதெய்வமாகக் கும்பிட்டுவருங் காளி, பிடாரி, மாரி, துரங்குணி, எசக்கி, கறுப்பண்ணன், மதுரைவீரன், முதலான சிறுதேவதைகளுக்கு அளவிறந்த கோழி, ஆடு, எருமை, முதலான குற்றமற்ற பிராணிகளை வெட்டிப் பலிஇடுகிறார்கள். தாழ்ந்த நிலைமையில் உள்ள ஏராளமான மனிதர்கள் இங்ஙனஞ்செய்து வருதலைப்பார்த்துப் 'பன்றியோடுகூடிய கன்றும்' செயல்மாறுபட்ட பான்மைபோற் சைவவேளாளர் சிலரும் பார்ப்பனர் சிலரும் இச்சிறுதேவதைகளை வணங்கப்புகுந்து இவர்களும் மேற்சொன்ன ஏழைப்பிராணிகளின் கழுத்தை அறுத்து அவற்றைப் பலி ஊட்டுகிறார்களாம். உயிர்க்கொலையாகிய புலைத்தொழிலைச்செய்யும் தாழ்ந்த வகுப்பாரைப்போலவே உயர்ந்தவகுப்பாரும் செய்யத் தலைப்பட்டால், உயர்ந்தோர் இவர், தாழ்ந்தோர் இவர், என்று எங்ஙனம் பகுத்துச் சொல்லக்கூடும்? உயர்ந்தோரும் தாழ்ந்தோராய்மாற உலகம் எங்கும் பாவமாகிய இருள் அன்றோ பரவும்? மனிதரிற் பலர் தாழ்ந்தோரானதும் சிலர் உயர்ந்தோர் ஆனதும் அவரவர் குணத்தினலும் செய்கையினலும் அறிவினலுமே என்பது எல்லார்க்கும் எல்லா நூலுக்கும் உடன்பாடாம். தெய்வத்தன்மை வாய்ந்த திருவள்ளுவரும் இதனாலன்றோ

"பார்ப்பான், பிறப்பொழுக்கங் குன்றக்கெடும்" என்றும்
"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையால்" என்றும்
"மேலிருந்தும் மேல் அல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழ் அல்லார் கீழ் அல்லவர்" என்றும் அருளிச்செய்தனர்?

இழிகுணங்களும் இழிந்த செய்கைகளும் உலகிற் கணக்கற்றனவாய்ப்பெருகி இருப்பினும் இவை எல்லாவற்றுள்ளும் மிகக்கொடியவை இரக்கம் அற்ற வன்னெஞ்சமும் கொலைத்தொழிலுமேயாகும். உயிர்களைக்கொலைசெய்தலும் அவற்றின் ஊனைத் தின்னலுமாகிய புலைத்தொழில் எல்லாப்பாவத் தொழிலினுங் கடைப்பட்டதென்னும் உண்மை

"நன்றாகும் ஆக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கங்கடை" என்னும் தமிழ் வேதமான திருக்குறளினாலும், "உயிர்களைக்கொல்லச்சொன்னவன், கொன்றவன், ஊனை அறுக்கிறவன், அதனை விற்கிறவன், அதனை வாங்குகிறவன், அதனைச்சமைக்கிறவன், புரிமாறுகிறவன், தின்கிறவன் என்னும் இவர்கள் அனைவரும் கொலைகாரர்களென்று சொல்லப்படுகிறார்கள்." என்னும் வடமொழியில் மனுஸ்மிருதியினாலும் தெளியப்படும்.

இவ்வளவுஇழிந்ததாக இருத்தலினாலேதான் உயிர்க்கொலை செய்பவர்களும் அதற்குக்காரணமாய் இருப்பவர்களும் இழிகுலத்தவரென்றும் அப்புலைத்தொழிலைவிட்டுச் சைவ வொழுக்கம் பூண்டவர்கள் உயர்குலததவரென்றும் வகுக்கப்படுவாராயினர். கொலைப்பாவக் கடலைத்தாண்டிப் புண்ணியக்கரை ஏறின மேற்குலத்தவர்கள் கொல்லா விரதத்தின் மேன்மையை எடுத்துச்சொல்லுதலாகிய படகைக் கொண்டு சென்று அப்பாவக்கடலிற் கிடந்து தத்தளிக்கும் மற்றைத் தாழ்ந்தசாதியாரை எடுத்து உயர்த்திக் கரைசேர்த்தலே புகழும் புண்ணியமும் ஆகும். கொலையையும் புலால்தின்னுதலையும் ஒருவன் அறவே ஒழித்து விடுவனாயின், அதனால் எத்தனையோ ஆடுமாடுகள் கோழி குருவிகள் மான்கள் மீன்கள் உயிர் பிழைக்குமல்லவோ? இங்ஙனமே ஒவ்வொருவராய்ப் புலைத்தொழிலைப் பலரும் நீக்கநீக்க, எண்ணிறந்தஉயிர்களும் தத்தம் உடம்புகளில் நிலைபெற்று நின்று இனிது உயிர்வாழும் அல்லவோ? நம்முடைய உயிர்

வாழ்க்கை நமக்கு இனியதாய் இருத்தல்போலவே எல்லாச்சீவர்களுக்கும் தத்தம் உயிர்வாழ்க்கை இனிப்பாயிருக்கின்றது. எல்லாத் தருமங்களினும் மேலதாய் விளங்கும் கொல்லாவிரதத்தைக் கைப்பற்றிஒழுகும் புண்ணியம் வாய்ந்து அதனைப் பிறர்க்கு அறிவுறுத்தும் நிலையிலுள்ள சைவரும் பார்ப்பனரும் தமதுயர்வைமறந்து, தாமும் ஆடு கோழி மாடு வெட்டிப்பலியிடும் பாவப்படுகுழியில் வீழ்ந்தால் இனிஉலகத்தில் நல்லறம் நிலைக்குமோ சொல்லுங்கள்! கொல்லா அறத்திற்கு ஒரு பாதுகாவலாய் அமைந்த மேற்குலத்தவரே அதனை அழித்தால் அதனினும் பெரும்பாவம் வேறுண்டோ? வேலியே பயிரைத்தின்றால் விளைவதெப்படி? இனி, இச்சிற்றுயிர்களை நம்பொருட்டுக்கொல்லாமல் சிறுதேவதைகளின் பொருட்டுக்கொல்விக்கின்றோமாதலால் அதுபாவமாகமாட்டாதெனின், அது பொருந்தாது. பிடாரி, சூரங்குணி, எசக்கி, மதுரைவீரன், முதலானவையாவை? தாம் உயிரோடிருந்த காலங்களிற் பலவகையான கொடுஞ்செயல்களைச் செய்து அவற்றிற்காக அரசனுலும் பிறராலுந் தண்டிக்கப்பட்டுப் பருவம் முதிரா முன்னரே இறந்தொழிந்த மனிதரின் பேய்வடிவங்களேயாகும்; இவை தாம்செய்த பாவத்தால் இந்த நிலஉடம்பைவிட்டுப் பேயுடம்பிற் புகுந்து இருள் உலகத்தில் அலைந்து திரிகின்றன. தாம்செய்தபாவம், பேயுடம்பில் தாம் அனுபவிக்குங் கொடிய நரகதண்டனையால் தீர்ந்தஉடன், முழுமுதற் கடவுளின் திருவருளாணையால் மறுபடியும் அவை மனிதவுடம்பிற்பிறக்கும். அறிவில்லாமாந்தர்கள் வணங்கிவரும் சில்லறைத்தேவதைகளிற் பல இப்போது மனிதராய்ப் பிறந்திருக்குமாதலால், அவைகள் இவர்களாற் செய்யப்படும் பூசையை ஏற்றுக்கொள்ளமாட்டாதனவாய் இருக்கின்றன. இப்போது இத்தேவதையின் ஆட்டம் இங்கே ஓய்ந்துபோயிற்று என்று அவற்றை வணங்குவோர் சிலகாற் சொல்லுஞ்சொற்களே இதற்குச்சான்றும். மனிதராய் இருந்தபோது கொலைகளவுகாமங்கட்குடி முதலான பாவங்களைச்

செய்து சடுதியில் இறந்து கடவுளின் ஆணையாற் பேய்வடிவங்களாய் அலைந்துதிரியும் அவ் ஆவிகளை வணங்குதலே குற்றமாகும். ஏனென்றாற் கொலைகாரர்களோடு பழக்கஞ் செய்பவன் அக்கொலைஞராலும் கள்வரோடு நேசஞ்செய்பவன் அக்கள்வர் கூட்டத்தாலும், வேசிக்கள்வரோடு சேர்க்கையுள்ளவன் அவ்வேசிக்கள்வராலும், கட்குடியரோடுசேர்ந்தவன் அக்கட்குடியராலும் சூழப்பட்டுப் பெரிதுந்துன்புறுதல்போல, இத்தீய பேய்வடிவங்களைத் தெய்வங்களாக வணங்குவோர் இவ் ஆவேசங்களால் எந்நேரமும் சூழப்பட்டு அவற்றால் மிகவுந்துன்புறுத்தப்படுவார்கள். கொலை முதலான பாவங்களைச்செய்வோர் நல்லோரை அணுகாமல் அஞ்சி விலகிப்போதல்போல, எல்லாம்வல்ல முழுமுதற்கடவுளான சிவத்தை வழிபடும் நல்லோரைக்கண்டு இக்கொடும்பேய்கள் அஞ்சி விலகி ஓடும். இவ்வியல்புகளெல்லாம் யாம் எழுதிய மரணத்தின்பின் மனிதர்நிலை, என்னும் நூலில் விரிவாக எடுத்துக்காட்டியிருக்கின்றோம்; அவை எல்லாம் இங்கு விரிப்பதற்கு இடம் இல்லாமையால் அதிற் கண்டுகொள்க. நம்போன்ற சிற்றுயிர்களிற் சேர்ந்த இப்பேய்களையும் மற்றெல்லா உயிர்களையும் ஆக்கவும் அழிக்கவும் வல்லது சிவம் ஒன்றேயாம். பாவங்களைச் செய்து பிறப்பிலும் இறப்பிலுங் கிடந்து சுழன்று வருந்தும் பேய்கள் எதனையும் ஆக்கவேனும் அழிக்கவேனும் சிறிதும் வல்லவனல்ல. இத்தகைய பேய்களைத் தெய்வங்களாக வணங்குவது எது போலிருக்கின்றதென்றால், ஓர் அரசன் கீழ்இருந்துவாழும் குடிகள் தம் அரசனை வணங்காமல் அவ்வரசனால் தண்டிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருக்குங் குற்றவாளிகளை அவ்வரசனாகப் பாவித்து வணங்குதலையே ஒத்திருக்கின்றது. ஆக்கவும் அழிக்கவும் வல்லவனான ஈசனாற் படைக்கப்பட்டு அவ்வீசனுக்குப் பிள்ளைகளாய் உள்ள எல்லா உயிர்களுள்ளும், மனிதரான உயிர்கள் மற்ற ஏழையுயிர்களான ஆடு கோழி மாடு பன்றி முதலியவற்றை வெட்டிப் பலியிடுவது எதனை ஒத்திருக்கின்றதென்றால், ஓர் அரசனுக்குரிய குடிமக்களிற் சிலர் தம்மினும் வலிகுறைந்த மற்றவர் சிலரு

டைய கைப்பொருள்களைப் பறித்துக்கொண்டுபோய் அக்குற்றவாளிகளுக்குக் கொடுத்து அவர்களை அரசராகப் பாவித்து வணங்குவதையே ஒத்திருக்கின்றது. தன்னால் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளை இங்ஙனம் வணங்குபவர் இன்னுரென்று தெரிந்தமாத்திரத்தாலே, அரசன் அவர்களைக் கடுந்தண்டனைக்குஉள்ளாக்குவதுபோல, ஈசனும் தன்னால் தண்டிக்கப்பட்ட பேய்களுக்குத் தான்படைத்த உயிர்களைக் கொன்று பலியூட்டும் அறிவில்லாமாந்தரை யமதூதரால் மிகவுங் கடுமையாகத் தண்டிப்பான் என்பது திண்ணம். சிறுதேவதைகளுக்கு உயிர்களைக்கொன்று பலியிடுவோர் இம்மையிலே தம்பிள்ளைகளைப்பறிகொடுத்து வருந்துவர்; தாமும் தம்மக்களும் நச்சுக்காய்ச்சல், அம்மை, குஷ்டநோய், கக்கற்கழிச்சல், பொருட்கேடு முதலான துன்பங்களுக்கு ஆளாகிப் பதைபதைப்பர்; மறுமையிலும்,

"கொல்லிடுகுத்தென்று கூறியமக்களை
வல்லிடிகாரர் வரிகயிற்றாற் கட்டிச்
செல்லிடுநீரென்று தீவாய்நரகிடை
நில்லிடுமென்று நிறுத்துவர் தாமே" என்றும்,

"கொன்றிலாரைக் கொலச்சொல்லிக் கூறினர்
தின்றிலாரைத் தினச்சொல்லித் தெண்டித்தார்
பன்றியாய்ப் படியிற்பிறந் தேழ்நரகு
ஒன்றுவார் அரன் ஆணையிதுண்மையே" என்றும்,

திருமூலமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய வண்ணம் யமதூதரால் அனல்நிறைந்த நரகத்தினும் மற்ற ஏழுவகைநரகங்களினும் அழுத்தப்பட்டு மிகநொந்து, திரும்பவும் இந்நிலவுலகத்திற் பிறக்குங்கால் பன்றியாய்ப்பிறந்து நைவார்கள். எல்லாவுயிர்களையும் படைக்கும் ஈசன் ஒருவனே அவற்றின் பருவம் அறிந்து அவற்றை அழித்தற்கும் உரியவன். அன்றி, மற்றமனிதர்கள் தம்போன்ற உயிர்களான பேய்வடிவங்களின்பொருட்டு வாய்அற்ற ஏழைஉயிர்களின் கழுத்தைவெட்டிப்பலியூட்டுதல் மன்னிக்கப்படாத பெருங்குற்றமும் பாவமுமாய் முடியும் என்று அறிந்துகொள்ளுங்கள்.

முழுமுதற்பொருளான சிவபெருமானை நேரே வணங்கும் புண்ணியமும் நல்லறிவும் இல்லாதவர்கள் காளி, கூளி, எசக்கி, கறுப்பண்ணன், மதுரைவீரன், முதலான சில்லறைவடிவங்களை வணங்கினாலும் அவற்றிற்கு ஆடு கோழி மாடு முதலிய உயிர்களைப் பலியிடாமல் வணங்குதலைச் செய்தல் வேண்டும்; அங்ஙனம் இன்றி அவற்றைப் பலியிட்டால், அவ்வுயிர்ப் பலிபூசையை அவை ஏற்றுக்கொள்ளமாட்டா. ஏனெனில், நிலவுலகத்தில் தாம் செய்த பாவங்களுக்காக ஈசனால் தண்டிக்கப்பட்டு முன்னமே அலறித்திரியும் அப்பேய்கள் மனிதர் அறியாமையாற் செய்யும் உயிர்ப்பலியை ஏற்றுக்கொள்ளுமாயின், ஈசன் படைத்த உயிர்களை மனிதர் கொலை செய்த பாவத்திற்குக் காரணமாய் இருந்ததுபற்றி அப்பேய்களை நம்பெருமான் இன்னும் கடுமையாகத் தண்டிப்பான். ஆனதுபற்றி, மனிதர் உயிர்ப்பலி இடுங்காலங்களில் எல்லாம் அப்பேய்கள் ஈசதண்டனைக்கு மிக நடுநடுங்கி அவற்றை ஏற்றுக்கொள்ளாமல் அப்பால் விலகி ஓடிப் போகின்றன. அதனால் அப்பாவத்திற்கு அவைகள் ஆளாவதில்லை; அவற்றைச் செய்யும் மனிதர்களே அப்பாவத்திற்கு முற்றும் உரியவராகின்றார்கள். அப்பேய்கள் மனிதர் மேல் ஏறிநின்று ஆடிய சிலசமயங்களில் யாம் அவற்றின் நேரேயிருந்து கேட்டபோது அவை தமக்கு உயிர்ப்பலி ஆகாதென்றே கூறின. பொய்யாக ஆவேசம் ஆடும் பொல்லா மனிதர்களே உயிர்ப்பலியிடவேண்டும் என்று சொல்லிப் பழிக்கும் பாவத்திற்கும் ஆளாகி இவ்வுலகத்திலும் மேலுலகத்திலும் சிவபெருமானால் தண்டிக்கப்படுகிறார்கள். ஆதலாற் சைவராய்ப்பிறந்த மேன்மக்களே, சிறுதேவதை வணக்கத்தையும் உயிர்ப்பலியையும் அறவே விடுத்து, மற்றக்கீழ்மக்களும் அவற்றைவிடும்படி செய்வித்துப் புகழையும் புண்ணியதனையும் வளர்த்து எல்லாச் செல்வங்களோடும் பொலிந்து நம்முழுமுதற்சிவத்தின் திருவருளுக்கு உரியவராய் வாழ்மின்கள்!

ஸ்வாமி வேதாசலம்.

( 14-ஆம் பக்கத் தொடர்ச்சி )

விவேகத்தோடு கூடிய வுண்மையான அமைதிக்கும் கள்ளம் கபட முதலிய காரணங்களாற் சிலர் மேற்கொண்டுள்ள போலியான அமைதிக்கும், மிகவும் வித்தியாசமுண்டு. முன்னது பரிசுத்தமான எண்ணங்களின் பலனாகவும், பின்னது தீயஎண்ணங்களின் பலனாவும் வெளிப்பட்டு விளங்குகின்றது.

ஒரு பொருளையபகரிக்க வேண்டுமென்ற இழிந்த வெண்ணத்தையுடைய ஒருவன் தான் விரும்பிய பொருளையபகரிக்கும் பொழுது அப்பொருளின் உரிமையாளராலாவது, பிறராலாவது, காணப்படின், அதனாற் போதருகின்ற கஷ்டங்களையும், நஷ்டங்களையும், பொறுத்துக்கொள்கின்றான். மேலும், அதுகாரணமாக வருகின்ற பலவேறு வகைப்பட்ட பழிமொழிகளையுஞ் சகித்து அமைதியுறுகின்றான். இனிக்காதல் காரணமாக நிகழுகின்ற வமைதியைப் பற்றிக் கவனிப்போம். ஒரு பொருளைப் பெற்று அனுபவிக்கவேண்டுமென்ற ஆசைகொண்டுள்ள ஒருவன், விரும்பியவாறு அப்பொருளையடையும் வரையும் அதனால் உளதாகின்ற துன்பங்களெல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு மிகவும் அமைதியுடையவனைப் போல் நடிக்கின்றான். இத்தகைய சம்பவங்களை யிவ்வுலகத்தில் அடிக்கடி பார்த்து வருகின்றோம். பூர்வத்தில் இராம பிரானும் இலக்குவ ஏந்தலும் ஜானகி தேவியோடு வனத்தின்கட் சென்றிருந்தபொழுது இராவணன் தங்கையான சூர்ப்பணகையென்பவள் இராகவன் பேரழகைக் கண்டு பெருங்காதல் கொண்டு 'ஓ பரத வண்ணா! என்னையங்கீகரித்து உடன் கொண்டு வாழவேண்டு'மென்று காதல் நோக்கும் கனிந்த மொழியும் பொருந்தப் பன்முறை பரிந்து கூறினான். ஏகபத்தினி விரதனான ஸ்ரீ இராமமூர்த்தி, அன்னவளை வியந்து நோக்கி யித்தகைய இழிவுரைகளை யினிமேல் என்னிடங் கூறல் தகுதியன்றென்று கடிந்து மறுத்துரையாடியுங் கேளாமல் அவள் காதற்

பெருக்கின் காரணத்தால் இளைய வீரனால் அங்கபங்க முறப்பெற்றாள். அங்ஙனம் அங்கபங்கமுற்று வருந்திநின்ற சூர்ப்பணகை யெவ்வளவு விரோதத்தையும் வெறுப்பையும் அவர்பால் செலுத்தவேண்டும்! அவ்விதம் யாதொன்று மின்றி மிக்க அமைதியை மேற்கொண்டு அடியில் வருமாறு கூற ஆரம்பித்தும் தன் பாலமைந்துள்ள காதலமைதியைக் காட்டினாள். அவ்வமையம் அவள் கூறிய மாதுரியமான சாதுரியவசனங்களாவன. "நாடிழந்து காடுபுகுந்துள்ள நாம் இப்பேரழகியை யினிதுறப் பெற்றோம். இவள் நம் பாலிருந்து என்றும் நீங்காதிருக்கவும், நோக்குவோரெவரும் இவள்மேல் காதல் கொள்ளாதிருக்கவும், தக்க சூழ்ச்சி யிது. என்று தெரிந்தே யெனது மூக்கு முதலியவுறுப் புக்களைப் போக்கினீர். இந்த வுண்மை யுரிமையை யான் நன்கு தெளிந்தேன். ஐயன்மீர்! தொண்டவர்களாகிய வுங் கள் கர்தனுக்குப் பாத்தியமான உருவமாத்திரம் எனக்கிருந்தால் போதும்" என்பது முதலாய இனிமையாகப் பேசியாசையுற்றாள். இக்கருத் தடங்கிய கவி அடியில் வருகின்றது.

"பொன்னுருவப் பொருகழலீர் புழைகாண மூக்கரிவான்
பொருள் வேறுண்டோ!
இன்னுருவ மிதுகொண்டிங் கிருந்தொழியு நம்மருங்
கே யேகாளப்பார்,
பின்னிவளை யபலொருவர் பாராரென்றேயரிந்தீர் பிழை
செய்தீரோ,
அன்னதனை யறிந்தன்றோ அன்பிரட்டிப் பூண்டது நானறி
விலேனோ."

இப்பாசுரத்தின் நுண் பொருளை நுணுகியாராய்வ தால் சில விசித்திரங்களும் மயக்கத்தால் போதரும் அமைதியினியல்பும், காதல் மிக்க கன்னியர் செயலும், கம்பரது கவியின் திறமும், சிறந்து விளங்கும். சிறிது துன்பஞ் செய்தவர்களையும் வெறுத் துரையாடலே மக்களியல்பு. அங்ஙனமிருப்பக் காரணமின்றியுங் கொடுஞ் செயல்களை

புரியுங் குரோத குணமிக்குடைய அவ்வரக்கர் குலக்கொடி அதிக சாந்தமுடையளாய் எப்படியாவது இவ்வழகனைத் தழுவி மகிழ வேண்டுமென்ற காதலினாலல்லவா இனிமையோடு இரகுவீரனைப் பார்த்துப் "பொன்னுருவப் பொருகழலீர்" என் விளித்தாள்! பாராமுகமாயிருக்கும் ஒருவரைத் தன் முகப்படுத்த விளிக்கும்பொழுது முகத்தை நோக்கியழைத்தலே மரபு. அங்ஙனமிருப்ப இவள் காலை நோக்கிக் கூறியதானது மகளிர் அகத்து நிகழும் தன்மையை விளக்குகின்றது அஃதெவ்வாறு எனில் தன்னால் விரும்பப்பட்ட ஆடவர்களை விரும்பிய பெண்கள் காணும்பொழுது நாணந்தலைக்கொள்ளும். கொள்ளவே அவரது முகத்தை நோக்கக் கூசித் தலைகுனிந்து நிற்பர். ஆகையால் இங்கு இச்சூர்ப்பணகையும் இராம பிரான் முகத்தை நோக்கக் கூசிக்காலை நோக்கிப் பேசினாள் என்பதே.

இன்னொரு விசித்திரத்தையும் கம்பர் இதில் உல்லாசமாக வமைத்துள்ளார். அஃதென்னையோவெனின் மூக்கும் காதும் இழந்துள்ளாள் ஆனபடியால் முகத்தையெதிர் நோக்க வெட்கமடைந்து தலை குனிந்து "கழலீர்" என்று கூறினாள் என்றபடி. மேலும் கழலீர்! என்று மாத்திரம் அழைக்கப்படாது, "பொன்னுருவப் பொரு" என்னும் அடைமொழிகளையுஞ் சேர்த்தது எற்றுக்கெனின், தான் தசமுகன் தங்கையென்பதறிந்தும் அவ்வரக்கர் குலபதியின் ஆற்றல் அதிகாரம் சேனாபலம் மனோபலம் தேகபல முதலிய வற்றையும் நன்கு தெரிந்தும் சிறிதும் அஞ்சாமல் தன்னை யித்தகைய அவமானஞ் செய்த அந்த இராமானுஜனது ஒப்புயர்வற்ற வீர குணத்தை மதித்து வியந்தமை விளங்குதற் பொருட்டென்க. இன்னும் பல நயங்கள் இக்கவியில் அமைந்து கிடக்கின்றன வாயினும் எடுத்துக்கொண்ட விஷயத்துக்கு இனமின்மையால், விடுத்து மேற்செல்லுகின்றேன்.

மயக்கச் சாந்தமும் அதன் இயல்புகளும் சூர்ப்பணகையின் சரித்திரத்தால்சிறிது தெரிய வந்தன. இனி மடம்' கபடம் பற்றிவரும் சாந்தமும் இத்தகையதே.

இப்படிப்பட்ட தீய எண்ணங்களை யகத்திலுடையவர்கள் மொழிகளுஞ் செயல்களும், இனிமையும், அமைதியும், உடையனவாகப் புறத்தே காணப்படினும், அவற்றின் உண்மைகள் அறிஞர் சமூகத்தில் விரைவில் வெளிப்படுகின்றன.

உண்மையான சாந்தமுடையவனிடத்தில் அநேக அற்புத சக்திகள் அடங்கிக் கிடக்கின்றன. வீரியமும், பரோபகாரமும், சன்மார்க்க நேசமும், சாந்த குணத்தைச் சார்ந்துதான் விளங்குகின்றன. கொடுஞ் செயலும் குரூர குணமும் உடையவர்களும் சாந்த புருஷர்களைச் சார்ந்திருக்கும் வரையும், தங்களிடத்திலே அவை தலையெடுக்காமல் நற்குணங்களே தலையெடுத்து விளங்கக் காண்கின்றார்கள். விரோதத்தை விரோதத்தால் வெல்வது மிகவும் அரிது. எவர்க்கும் அடங்காமல் கடின சித்தத்தோடு திரியும் ஒருவன் அமைதியும், அன்பும், உடையானைக் கண்டவுடனே யடங்கி யன்பு, செலுத்துகின்றான். சாந்த சீலர்களாகிய மேலோர்கள் வசிக்கும் இடங்களில் இயற்கையிலேயே பகையுடைய மிருகங்களும் அப்பகையை யறவே விடுத்து, மிகவும் உரிமையோடு உறவாடி மகிழுகின்றன. இத்தகைய வற்புதங்களை யாம் இன்றும் நேரில் காணலாம். சாந்தமானது விவேகமும், தீரமும், நிரம்பிய வுள்ளத்தில் தனது உண்மைச் சோதியை வீசுகின்றது. உண்மையில் சாந்த தேஜஸ் உடையவன் வயோதிக பருவத்தையடைந்திருப்பினும், யௌவனப் பொலிவையே கொண்டிருக்கின்றான். அவனுடைய அறிவிலே தான் உலக வுண்மைகளும் உயிரின் தன்மைகளும் புலப்படுகின்றன. உண்மையான சாந்தத்தின் உயர்தரமான பெருமையைத் தெரிவது அருமையாயினும் மனத் தத்துவங்களின் இயல்புகளை யறிந்துள்ள மேதாவிகளிடத்தில் அது எளிதாக வமைந்திருக்கின்றது. சாந்தமுடையோம்! சாந்தமுடையோம்! எனச் சொல்லளவிற் பிதற்றித் திரிகின்ற கோழைத்தனமுடையவர்களைக்

சாந்த குணத்தின் தகுதியான தனிப் பயன் ஒருபோதும் சார்வதில்லை. சாந்தமென்பது பலவீனமான சபலத்தன்மையன்று. இவ்வுலகத்தில் மிகுந்த செல்வாக்கையும் உயர்ந்த நன்கு மதிப்பையும் விரைவி லடைதற்குப் பரமசாதனமாயுள்ளதெதுவோ அதுதான் சாந்தம் எனப்படும். மழைத்தாரையானது உலகத்திற்கு எவ்வளவு நன்மையைப் பயக்கின்றதோ அவ்வளவு பெரிய நலங்களைச் சாந்தமுடையவன் மொழிகளுஞ் செயல்களும் உயிர்கட்கு அருமையோடு உதவி வருகின்றன. எல்லா வுயிர்களும் இயல்பாகவே இன்பமும், மேன்மையும், எய்த விரும்புகின்றன. அவ்வின்பமும் மேன்மையும் அநுபவத்தோடு கூடிய அமைதியை யடுத்துவருகின்றன. அது ஞானத்தின் அடிப்படையிலுள்ளது. உலக முழுவதையும் ஒருங்கேவசப் படுத்திநிற்கும் உயர்ந்த ஆற்றல்வாய்ந்தது. வீண் பெருமைகளும் விரோதங்களும் அதனிடத்தில் ஒருபொழுதும் தோன்றுவதில்லை. எல்லா வுயிர்களின் இயல்புகளையும் நுட்பமாயறிந்து தக்கவாறு ஒழுகித் தனியே தீரமாக நிற்கின்றது. மக்களறிவுக்குப் பயன் பிறவுயிர்களின் இயல்புகளையினிதுணர்ந்து அவையின்பமுறத்தக்க வழியில் ஒழுகுதலேயாம். உயிர்க்குரிய அறிவும், செயலும், இல்லாதவன் உயிரோடு கூடி வாழ்வானாயினும் இறந்தொழிந் தாருள்ளொருவனாக அவன் மதிக்கப்படுகின்றான். நம்முடைய அறிவும், செயலும், அமைதியோடு கூடிய பொழுது தான் அவை நமக்கும் பிறர்க்கும், பெரும் பயனுடையதாக விளங்குகின்றன.

அமைதியொன்றினுக்கே நிலை கலங்காத் திண்மையுரியது. அமைதியென்பது சொல்லளவில் அடக்கமுடையதாயிருப்பினும் பொருளளவில் எல்லா நலங்களையும் அடக்கிக்கொண்டிருக்கின்றது. அகன்ற அறிவையும் ஆழ்ந்த வுசாவையும் தெளிந்த பயனையும் சிரமேற் கொண்டுள்ளது.

அமைதியின் பகையாகிய கவலையுஞ் சினமும் அணுகாது அகலவிடுதலே யறிவுடைமைக் கழகு. சினமானது முகத்தின் கண்ணமைந்துள்ள பொலிவையும் அகத்தின் கண்ணமைந்துள்ள வுவகையையும் ஒருங்கேயழிக்குங் கொடுமையுடையது. அது தோன்றும் பொழுதே யறிவாற்றெளிந்து

அடக்கி விடுதல் நலம். அது மனத்தில் முளைத்துக் கிளைத்து விடுமானால் அறிவைத் தலையெடுக்கவிடா தடக்கித் தனக்கு அடிமையாக்கிக் கொள்ளும். சினமுடையான் அறிவுக்கண் குருடுபடுகின்றது. அதனால் அவன் எவ்விதமான நலத்தையும் தெரிந்துகொள்ளச் சக்தியற்றவனாகின்றான். மனதில் வெகுளியைக் கொள்ளாதவன் எவனோ அவனொருவனே தான் கருதிய எல்லா நலங்களையும் கொண்டு மகிழுங் குணவானாகின்றான். "முனியாதார் முன்னிய செய்யுந் திரு" என்பதும் ஈண்டுணரத்தக்கது. சினமும், கவலையும், நம்முடைய வுள்ளங்களில் அடிக்கடி தோன்றுமாயினும் அமைதியான அறிவின் பிரகாசத்தால் அவை மறைந் தழியும்படி முயன்றுவருதல் நமது கடமையாம். இத்தகைய வுயர்குண வியல்பையறிந்து தெளிந்து அமைதியுடையவர்களாய் வாழுகின்ற மேலோர்களை யென்றும் நமது தமிழ் நாடுபெற்று வருகின்றது. இன்றும் பல்லோரைக் காணலாம். அன்னோர் கொள்ளும் உணவும் உடையும் வாழ்க்கையும் மிகவும் இனிமையுடையனவாயிருக்கின்றன. சத்துவகுண வுணவையுண்டு சாந்தமென்னுஞ் சற்குணத்தைக் கொண்டு உன்னதமான பதவியை யடைந்து பிரகாசிக்கின்றார்கள். சகோதரர்களே! இத்தகைய வுண்மையான சாந்த குணத்தின் விரிந்த பயனைத் தெரிந்து உயிர்களிடத்தில் அன்பும், பண்பும், புரிந்து வாழ்வதே நமது கடமையாம். நாம் பெறுதற்கரிய மக்கட்பிறப்பின் பெருமையைப் பெற்ற பயனுமாம். சுபம்.

## நன்மொழி.

"ஒரு மொழியன்னை வரம்பி லாஞான
முற்பவ காரண னென்றுந்
தருமமே துணைவன் கருணையே தோழன்
சாந்தமே நலனுறு தாரம்
அரியதின் பொறையே மைந்தன் மற்றிந்த
வறுவருமல்ல தாருறவென்
றிருவரி விளையோன் மொழிந்தனன் றன்பே
ரிதயமா லவர்க்கிடை யெடுத்தே."

—வில்லியாழ்வார்

ஜகவீரபாண்டியன்.

## சமாசாரம்.

**காலஞ்சென்ற சகோ. ஸ்ரீமான் எஸ். பத்மநாப ஐயர்.** திருமீயச்சூர் ஸ்திரீகள் பள்ளிக்கூடத்து உபாத்தியாயராயும் திருமீயச்சூர் இந்திய ஸ்திரீகள் கிளைச்சங்கக் காரியதரிசியாயும் இருந்த சகோதரர் ஸ்ரீ எஸ். பத்மநாப ஐயர் அவர்கள் சென்ற அக்டோபர் மீ 24உயன்று தேக வியோகமானார் என்று அறிய வருந்தலானோம். வித்தியா விஷயமாயும் மத விஷயமாயும் இப்பெரியவர் மிகவும் உழைத்து வந்தார். தான் ஏற்றுக்கொண்ட கடமையாகிய ஸ்திரீகளுக்கு கல்வி கற்பிக்கும் விஷயத்தில் இடைவிடா முயற்சியும் ஊக்கமும் கொண்டு உழைத்து வந்ததைப்பற்றி யாவரும் இவர் பேருபகாரத்தை வியந்தார்கள். இவர்கள் செய்த வேலையை இவரைப்போல் செய்யக்கூடியவரைக் காணுதல் மிகவும் அரிதாகையால் யாவரும் இவருடைய வியோகத்தைத் தாங்காமல் வருந்துகிறார்கள். ஆனால் இறைவனது ஆணையால் இவ்வுடல் நீத்த இவர் காலக்கிரமத்தில் புதிய திடமான தேகத்தோடு பிறந்து சீக்கிரத்தில் அவதரிக்கப் போகும் பரமனது கிருபையைப் பெறுவாராக. பி. வி. ராமச்சந்திர சாஸ்திரி.

---

**புதுக்கோட்டையில் நவராத்திரி**—புதுக்கோட்டை சமஸ்தானத்தில் நவராத்திரி காலத்தில் பண்டிதர்களைப் பரீக்ஷைசெய்து அவர்களுக்கு ஸன்மானம் செய்வது வழக்கம். இந்த வருஷத்தில் பொது ஜனங்களுக்கு பண்டிதர்களுடைய ஞானதனமானது உபயோகப்படுமாறு தர்பார் அவர்கள் புதிதாய் ஒரு ஏற்பாடு செய்தார்கள். அதாவது பண்டிதர்கள் சாதாரண ஜனங்கள் சபையில் உபந்யாசங்கள் செய்தார்கள். யாவரும் கேட்டு ஆனந்தித்ததுடன் பெரும்பயனையும் அடைந்தார்கள். இந்த விசேஷத் திருத்தத்திற்கு பிரஹ்மஸ்ரீ. கே. எஸ். இராமசந்திரையர் அவர்கள் காரணம். வருஷா வருஷம் இந்த ஏற்பாடு நிகழும் என்று எதிர் பார்க்கிறோம். ஐயர் அவர்களைப்போல் பரோபகாரம் செய்ய வேண்டுமென்ற அவாவானது இருந்தால் அந்தஎண்ணமானது சமயம்வாய்த்தபோதெல்லாம் உலகிற்கு உபயோகமான காரியங்களைச் செய்யும்படி தூண்டுகிறது. இவரல்லவோ உண்மையான சகோதரர்.

---

**புதுக்கோட்டையில் சதாசிவேந்திரசபை.** இப்பெயர் கொண்ட பிரஹ்மஞ்ஞானக் கிளைச்சபையானது சில வருஷங்களாகத் தூக்கம் கொண்டிருந்தது. ஆனால் இவ்வருஷம் விஜயதசமியன்று அதாவது 25—10—17ல் சகோ. கே. எஸ். இராமச்சந்திரையா அவர்களால் எழுசப்பெற்றது. அவர் பிரசிடெண்டாகவும், மகா-ள-ள-ஸ்ரீ வக்கீல் மஹாலிங்கமையர் பி. ஏ. பிரசிடெண்டாகவும் மகா-ள-ள-ஸ்ரீ ஏ. இராஜகோபால ஐயங்கார் அவர்கள் காரியதரிசியாகவும் நியமிக்கப் பட்டார்கள். புதிய அங்கத்தினராக ஐவர் சேர்ந்திருக்கிறார்கள். பழய 6 அங்கத்தினருடன் இச்சபையில் 11 அங்கத்தினராகிறார்கள். இனித் தூங்காமல் இச்சபையானது

புதுக்கோட்டையில் மஹான்களின் கிருபையானது பொழிவதற்கு ஒரு கால்வாயாக இருக்குமாறு நன்றாய் ஊக்கத்துடன் உழைக்க வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். சகோ. வி. நாராயணசுவாமி ஐயர் அவர்கள் செங்கல்பட்டிலிருந்து புதுக்கோட்டை வந்திருப்பது மேற்கூறிய சபையின் பாக்கியமே. பிரஹ்மஞான சபையின் உபயோகங்களைப்பற்றி அங்கத்தினர்க்கு எடுத்துரைத்தார். 26-10-17 முதல் வாரந்தோறும் கூடும் சந்திப்புகளில் பகவத்கீதையையும், மிஸ். கிருஸ்டி என்ற அம்மாளின் ஆங்கிலப் புத்தகமான பிரஹ்மஞான தர்சனம் பாலபாடத்தை யாவருக்கும் விளங்கக்கூறுகிறோம். இன்னும் இரண்டு மாதங்கள் இவர் புதுக்கோட்டையிலிருப்பதாகக் கேள்விப்பட நாம் சந்தோஷிக்கிறோம். சகோ வி. நாராயண ஐயர் அவர்கள் சென்றவிடம் எல்லாம் ஒரு நிமிஷமும் சும்மாயிருக்காமல் தன்னுடைய காலத்தை உபகாரமாய்ச் செலவழிப்பதோடு மற்றவர் காலத்தையும் உயர் லாபத்தோடு செலவழிக்கும்படி செய்வார் என்பது நாம் நன்றாக அறிவோம்.

---

## அறிவிப்பு.

### சென்னை ஸ்ரீவைஷ்ணவ சித்தாந்த சபை

இச்சபையின் 7-வது வருஷோத்ஸவமானது திருக்கண்டியூரில் 26, 27, 28 தேதிகளில் நடைபெறும். மேற்படியூர் தஞ்சாவூருக்கு வடக்கே 5 மைலிலிருக்கிறது. மதவிஷயமாயும் வேதாந்த விஷயமாயும் உபந்யாசங்கள் நடைபெறும். 27, 28உ மாலையில் வித்வத்ஸதஸும் நடைபெறும்.

கும்பகோணம், ஸ்ரீவேய திருமலை மாடபூசி சதுஸ்சாஸ்திர வேத கல்பதரு சேஷாசாரியார்சுவாமியவர்கள் வருஷோத்ஸவத்தை துவக்குவார்கள்.

---

## புத்தக விமர்சம்.

**கதைப்பூங்கொத்து.** காலஞ்சென்ற பண்டிதஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் (பி. எ.) அவர்களின் குமாரன் வி. சூ. நடராஜனால் இயற்றப்பட்டது. இது ஸமஸ்கிருதத்தில் வெளிவந்துள்ள கதாகுஸுமமஞ்சரி என்ற நூலின் மொழிபெயர்ப்பு. சிறுவர்க்கென்றே எழுதப்பெற்றது. இப்பூங்கொத்தில் 30 கதைகள் அடங்கியிருக்கின்றன. ஒவ்வொரு கதையின் இறுதியில் அக்கதையின் படிப்பினையை ஞாபகப்படுத்தக் கூடியவாறு அழகாக பழமொழிரூபமாகக் கூறப்பட்டிருக்கிறது. இக்காலத்தில் சிறுவர் உபயோகத்திற்கென்று வெளிவந்து பள்ளிகளில் கற்பிக்கப்படும் புத்தகங்களில் இலக்கணப் பிழைகளும் சொற்சோர்வுகளும் இருப்பதைப் பார்க்கிறோம். ஆனால் இப்புத்தகமானது எளிய இனிய நடையில் மேற்கூறிய பிழைகளில்லாமலிருப்பதைப் பார்க்க மிகவும் சந்தோஷப்படுகிறோம். இதனை ஆக்கியோர் வயதிற் சிறியவராயினும் தன் தகப்பனார் மிகவும் நேசித்த தமிழின் வாசனையை மறவாது இனியதமிழ் நடையில் இப்புத்தகத்தை வெளிப்படுத்தியது மெச்சத்தக்கது. இதன் விலை 0—2—6

## ஆமதபாத் ஸத்யக்ராஹாசிரமம் சுயாட்சித் தொடர் 2-ஆம் துண்டுப் பத்திரிகை

இந்தியப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் சுதேச பாஷைகளிலேயே கல்வி கற்பித்தல். இது பி. ஜெ. மேதா எம். டி., பாரிஸ்டர் அவர்களால் ஆங்கிலத்தில் பிரசுரிக்கப்பட்ட துண்டுப்பத்திரிகை. இதைப்படிப்போரை விசேஷமாக தீவிரமாய்ச் சிந்திக்கும்படி செய்யக்கூடிய சிறிய புத்தகமிது. இந்தியாவில் இக்காலத்தில் அனுசரிக்கப்பட்டு வருகிற கல்வி முறையானது, இங்கிலாந்தில் அனுசரிக்கப்பட்டு வந்த முறையின் பிரதிபிம்பம் தான். ஆகையால் இங்கிலாந்தில் எம்முறையானது சில காலத்துக்கு முன் கைப்பற்றப்பட்டதோ அது சரியென்று ஆங்குள்ள பிரமுகர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு இங்கு அனுசரிக்கப்படுகிறது. அதற்குள் புதிய விவேகிகள் புதிய முறைகளைக் காட்ட முன் வந்து இங்கிலாந்தில் அவைகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. அங்ஙனம் சிறிதுகாலம் கழித்து அம்முறைகள் தான் சரியென்று இங்கிலாந்திலுள்ள எல்லா பிரமுகர்களும் ஏகோபித்து ஏற்றுக்கொண்ட பிறகு இந்தியாவில் இவைகளைப்பற்றி ஆலோசிக்கத் துவங்குகிறார்கள். இன்னும் சிலகாலம் சென்ற பிறகு தான் இப்புதிய முறைகளை அனுசரிக்க ஆரம்பிக்கிறார்கள். அன்னியரைப் பின் பற்றுவது தான் சரியான முறையென்று இருக்கும் வரை இந்தக்குற்றம் இருக்கும் என்பது நிச்சயம். இங்கிலாந்தில் பிரபுக்களுடையவும், கனவான்களுடையவும், குழந்தைகளுக்கென்று பள்ளிகள் ஸ்தாபித்து, அவைகளில் சாதாரண மனிதர்கள், ஏழைகளுடைய குழந்தைகளுடன், கலக்காமல் செய்வதே முறையென்று வழக்கமாயிருக்கிறது. அதுதான் இங்கிலாந்தின் பொருமைக்குக் காரணம் என்று சொல்லுவது வழக்கமாயிற்று. அதைப்பார்த்து இந்தியாவிலும் அம்மாதிரிப் பள்ளிகளை ஸ்தாபிக்கலானார்கள். கல்கத்தாவில் பிள்ளை ஒருவனுக்கு ஊண், இருப்பிடம், பள்ளிக்கூட சம்பளம் உள்பட மாதம் ஒன்றுக்கு ரூ 110 என்று 14 பெயர்கள் மட்டும் படிக்கிற சர்க்கார் பள்ளிக்கூடம் ஒன்று இருக்கிறது. ஆனால், இங்கிலாந்திலோ பள்ளிக்கூடங்களின் ஆளுகையிலிருக்கப்பட்ட 'ஹாஸ்டல்' என்ற உறையிடத்தில் மாணக்கர் இருப்பதைக் காட்டிலும், அவர்கள் தாய் தந்தை உறவினரிடமிருப்பதுதான் சிலாக்கியம் என்ற கொள்கையை இப்போது சில மதியூகிகள் வெளியிட்டு வருகிறார்கள். இது இங்கே அங்கீகரிக்க 40 வருஷம் செல்லும். ஆகையால் அன்னியர் செய்வதைப்பார்த்துச் செய்கிற மதியிலிகளாய் விடுகிறோம். நாமாக எது சரியென்று நம்முடைய புத்தியை உபயோகித்தாலல்லவோ நமக்குக் கௌரவம் உண்டு. எது இன்னொரு தேசத்தில் நலமென்று கருதப்படுகிறதோ அதுவே நமக்கும் நலமென்று சொல்ல ஏதுவில்லை. ஒவ்வொரு ஜாதியானுக்கும் தேசத்தானுக்கும் உரித்தான குணமுண்டு, இந்தியன் ஆங்கிலேயனாக முடியாது. எவ்வளவு முயன்றாலும் அவன் போலியாக ஆவனேயொழிய அசல் குணமுள்ள ஆங்கிலேயனாக முடியாது. உடைகளிலும், எண்ணங்களிலும்,

எண்ணங்களுக்கு வாஹனமாகிற பாஷையிலும், இந்தியன் தன்னுடைய சொந்தவழியில் தன் இயற்கைக்கு ஏற்றவாறு முன்னேற்றமடைய முயலுவானாகில் தன்னுடைய தேசத்துக்கும் க்ஷேமத்தை யுண்டாக்குவதோடு உலகத்துக்கும் க்ஷேமத்தை யுண்டாக்குவான். ஏன் என்றால் உலகமானது எல்லாம் ஆங்கிலமயமாகவே ஆகவேண்டுமென்பது கடவுளது கருத்தல்ல. இந்தியனுக்கு இயல்பான சிலாக்கிய குணங்களை இந்தியனும் மற்ற தேசத்தவர்கள் தங்கள் தங்களுக்கு இயல்பான சிலாக்கிய குணங்களையும் விருத்திசெய்ய முயல்வாராயின் உலகமானது மிகவும் அழகுள்ளதாயும் பூரணம் பெற்றதாகவும் ஏற்படும். அப்படி இந்தியன் தன் இயற்கைப்படி முன்னேற்றமடைய வேண்டுமானால், அவனுக்கு ஏற்றபடி கல்விமுறைகளும் ஏற்படவேண்டும். ஆங்கிலவாயிலாகவே சகல ஞானத்தையு மடையவேண்டுமென்ற பிராந்தியை ஒழிக்க வேண்டும். எவ்வளவுகாலம் இப்போது நடைபெறும் கல்விமுறை நிகழ்ந்தாலும் ஒரு சிலர் மட்டும் கல்விகற்க முடியுமேயொழிய, சகலரும் கற்கமுடியாது. அப்படிக் கற்றவரும் முற்றுமறியமுடியாது. இது சுபாவம் ஜப்பான் தேசத்தில கல்விகற்பிப்பது சுதேச பாஷையிலேயே. ஆகையால் சென்ற 50, 60 வருஷங்களுக்குள்ளாக அநேகமாய் ஜப்பானியா அனைவரும் எழுதப்படிக்கத் தெரிந்தவராக ஏற்பட்டுவிட்டார்கள். ஆகையால் இந்தியாவிலும் அவ்விதமே சுதேச பாஷையிலேயே கல்வி கற்பிக்கவேண்டும். ஆனால் ஆங்கிலத்தை விட்டுவிட வேண்டியதில்லை. வேண்டுவோருக்கு அதையும் கற்பிக்க வேண்டியதுதான். எங்ஙனம் ஜப்பானில் சிலர் ஆங்கிலம் முற்றும் பயின்று மற்ற பாஷைகளில் வெளியிடும் புத்தகங்களை மொழிபெயர்த்துச் சாதாரண ஜனங்களுக்கு உபயோகமாகும்படி செய்கிறார்களோ, அம்மாதிரியே இங்கும் செய்யவேண்டியது அவசியம்.

இவ்விதமான பல அபிப்பிராயங்களை சகலரும் அறியும்படி விளக்கியிருக்கும் இவ்வரிய சிறு புத்தகத்தைப் பார்க்க மிகவும் சந்தோஷமடைந்தோம். நமது ராஜதானியில் ஆங்கிலம் மிகப்பயின்று தமிழை மிகவும் இகழ்ந்து வருபவர்கள் இதைப்படித்து தமிழையும் பேணுவார்கள் என்றும், இச்சிறு புத்தகத்தில் அடங்கிய விஷயங்களை தமிழில் பிரசுரம் செய்து தமிழின் அபிவிருத்தியை நாடுவார்கள் என்றும் எண்ணுகிறோம். எத்தத்துவத்தையும் தமிழ் வாயிலாய் வெளியிடமுடியாதென்று பிதற்றுவது பேதமை யென்று யாவரும் அறிவாராக.

---

ஸ்ரீமான் அப்துர் ரஹீம் அவர்கள் தனி ரீப்போர்ட்டு. மதுரை ஸ்வராஜ்யஸமாஜத்பத்திரிகை நிர் 9. விலை 0—6—0 பப்ளிக் ஸர்விஸ் கமிஷன் என்ற விசாரணை சபையாரில் மற்ற யாவரும் ஒரு சாபான அறிக்கைப் பத்திரத்தை வெளியிட, சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் கனம் அப்துர்ரஹீம் அவர்கள் தனியாக ஒரு அறிக்கை யெழு

ஜ்ஞர் இவருடைய அறிக்கையானது இந்தியாவின் அபிவிருத்திக்கு ஏற்றதாகவும், இந்தியரின் பேரில் அனுதாபத்தோடும் தேசபக்தியோடும் எழுதியதாகிறது. மற்றவர்கள் அறிக்கையோ அப்படியல்லவென்று இந்தியரால் கருதப்படுகிறது. ஆகையால் பொதுஜனங்கள் கனம அப்துர் ரஹீம் அறிக்கையில் கூறியிருக்கும் முக்கிய விஷயங்களை அறியும்படி சிறு துண்டுப்பத்திரிகையாக எளிய நடையில் வெளியிட்டிருப்பதைப் பார்க்கச் சந்தோஷிக்கிறோம்.

---

## பத்திரிகை விமர்சம்

பேராசிரியன்—உபாத்தியாருக்கெனவே உலாவிவரும் மாதாந்தரச் செந்தமிழ்ப்பத்திரிகை. வருஷச்சந்தா ரூ 1 மட்டும். மைலாப்பூர் மதராஸ். ‘ஸற்குரு’ வென்று முன்னர் வெளிப்போந்த மாதாந்தரப் பத்திரிகையானது இப்போது மேற்கூறிய பெயருடன் பண்டிதர் சே. சோமசுந்தரம்பிள்ளையவர்களால் நடத்திவரப்படுகிறது என்று அறியச் சந்தோஷிக்கிறோம். ஜூலை, ஆகஸ்டு மீ சஞ்சிகைகள் வரப்பெற்றோம். அவைகளில் உபாத்திமாருக்கு உபயோகமாகக்கூடிய பல விஷயங்கள் பொதிந்து கிடக்கின்றன. உபாத்தியாயரல்லாத ஏனையோருக்கும் உபயோகமுள்ள சில விஷயங்களும் காணப்படுகின்றன. இப்பத்திரிகை கல்வி விஷயத்தில் உலகத்துக்குப் பேருதவி செய்துவரும் என்று எண்ணுகிறோம். தமிழ் வியாசங்களினிடையே ஆங்கிலப் பதங்களை ஆங்கில எழுத்துக்களிலேயே அச்சிடுவதும், ஒவ்வொரு விஷயத்தையும் தலைப்பில் ஆங்கிலத்திலேயே துலக்கி அப்பால் தமிழில் துலக்குவதும் வழக்கமாயிருக்கிறது. தமிழ்ப்பத்திரிகையை வாசிப்போரில் அநேகர் ஆங்கிலப் பழக்கமேயில்லாதவராகவிருக்கலாமல்லவா? அவர்களுக்கு முற்கூறியது நிரர்த்தமாகவும், பிற்கூறியது அனுவசியமாகவும் ஆகிறது. மேலும் ஆங்கிலத்தில் கூறாத விஷயங்களை தமிழில் கூறியதால் மட்டும் தெரிந்துகொள்ள முடியாதென்று சொல்வதுபோலிருக்கிறது. கையொப்பம் போடுவோரும் ஆங்கிலத்திலேயே போட்டால் இத்தகைய பத்திரிகையை ஆங்கிலம் தெரியாதவர் படிக்கவேண்டியதில்லையென்று உணர்த்துவது போலாகின்றது. ஆனால் இது எண்ணமில்லையென்றறிவோம். இவ்வழக்கத்தை ஒழித்தல் நலமாகும்.

# சர்வதேள் விஷ சஞ்சீவி.

"கதறி வந்தவன் களிப்புடன் செல்வான்!"

"விஷம் தீண்டினவன் நிமிஷத்தில் குணமடைவான்!"

குணமில்லாவிட்டால் ரூ. 100 இனாம் கொடுக்கப்படும்.



கனவான்களே! ஒவ்வொரு வீட்டிலும் தேளினுடைய உபத்திரவம் பொறுக்கமுடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனைவரும் கண்டு விசனமுற நேரிடுவதைப் பற்றி, நாம் அதிக கஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்த மருந்து கண்டு பிடித்திருக்கிறோம். இது அநேக ஐரோப்பிய டாக்டர்களாலும், தமிழ் வைத்திய பண்டிதர்களாலும், நன்கு மதிக்கப்பெற்றது. எமது மேற்கண்ட லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷ சஞ்சீவியைத் தேள்கொட்டின இடத்தில் உபயோகிக்க உடனே ஒன்றிரண்டு நிமிஷத்திற்குள் குணமடையச் செய்யும். இவ்விஷ சஞ்சீவியை இன்னும் எலி, நாய், பூரான், செய்யான், பாம்பு, நண்டுத் தெறுக்கால் முதலிய எவ்வித விஷ ஜெந்துக்கள் தீண்டினாலும், டைரக்ஷன்படி சொன்ன பிரகாரம் உபயோகித்தால் குணமடையலாம். மேற் சொன்னவைகளுக்கு உபயோகித்தது குணமில்லாவிடில், பணம் வாபஸ் செய்து விடப்படும்.

இந்த சர்வதேள் விஷ சஞ்சீவியைக் கைப்பற்றுங்கள்: இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டியது. ஏனென்றால், மனிதனை இரவில் 12 மணிக்கு நித்திரையில் விஷம் தீண்டி விட்டால், அம்மனிதன் எவ்வளவோ அவஸ்தைப்பட்டு அநேக மருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயனடையாமற் போகிறதல்லவா? அதற்காக இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்க வேண்டியது. அடியிற் கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

விலை டாக்கட் 1-க்கு 0—6—0

டசன் 1-க்கு [illegible]—0—0

விலாசம்

**வி. ஏ. எஸ். பாணி,**

**நெ. 3, இருள்ப்பன் வீதி.**

மதராஸ்.

# பொருந்தமான ஔஷதம்

அதிக மருந்துகளைப்பற்றி விசேஷ விளம்பரம் வரும் அல்லது வாராதென்பது கேள்வியல்ல வரத்தான் செய்யும். அப்படி வருவதும் காலத்துக்குப் பொருந்திருக்கிறது.

மெதுவாய்க் குணந்தரும் மருந்துகளை ஜனங்கள் வாங்கி உபயோகிப்பார்களா அல்லது எவ்வித வியாதிக்கும் உடனே குணத்தையும் தேகபலத்தையும் கொடுக்கிற எங்கள் அற்புதமான

## ஆதங்க நிக்கிரஹ மாத்திரை.

களை உபயோகித்து நலம் பெறுவார்களா வென்பதுதான் கேள்வி. இந்த ஆ. நி. மாத்திரைகள் அத்தியாச்சரிய சமர்த்தமான மேக ரோகங்களை வேரோடு களைந்து, மனதுக்கும் தேகத்துக்குமுள்ள பலஹீனத்தை நீக்கி, சுகமான ஜீரணசக்தியைக் கொடுக்கின்றன. அவைகள் ரத்தத்தை சுத்திசெய்து விர்த்தியாக்கி நரம்பு ஸ்தானங்களை உறுதிப்படுத்தி புத்தி தீக்ஷண்யத்தைக் கொடுத்து வீரிய ஸ்கலித ரோகங்களை குணப்படுத்துகின்றன. இவைதான் பலத்தைக் கொடுக்க திவ்யமருந்து.

மருந்து செய்வதில் கெடுதி விளைவிக்கக்கூடியவைகள் ஒன்றும் சேர்க்கப்படவில்லை.

32 மாத்திரை கொண்ட டப்பி 1-க்கு விலை ரூ. 1

எங்கள் காமசாஸ்திரம் என்னும் புஸ்தகத்தில் சரீரசம்பந்தமான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. கேட்போருக்கு இனாமாய்க் கொடுக்கிறோம்.

ஒவ்வொருவரும் வாசிக்கவேண்டிய அவசியம்.

## ஒரு பெரிய வேலை

எந்த உயர் உத்தியோகஸ்திலிருந்தாலும் கூலி வேலை செய்தாலும் தம் தேகத்தைக் காப்பாற்றிக்கொள்வது தான் முதல் வேலை யென்பதை எல்லோருக்கும் ஞாபகப்படுத்துகிறோம்.

வைத்திய சாஸ்திரி,

**மணிசங்கர் கோவிந்தஜி,**

ஆதங்க நிக்கிரக ஔஷதாலயம்,

**45-மேலக்கோபுரவீதி.**

மதுரை.